திருக்கோணமலை, அன்புவழிபுரம்

## தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய

# மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்



255.22
தில்லை
SLIPR.

01.09.2000

திருக்கோணமலை அன்புவழிபுரம்

## தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய

# மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

## 01 - 09 - 2000


255.22
திருகோ
SUPR.

திருமதி பத்மா சோமகாந்தன்
திகதி 31/8/06



39955

S. SOMAKANDHAN
Justice of the Peace for All Island
Reg. No. 2000/07/W/All B/311
215 G 1/1, Park Road, Colombo-5



ஸ்ரீ தில்லையம்பலப்பிள்ளையாருக்கு கும்பாபிஷேகம் நடைபெறும் காட்சி. பிரதிஷ்டாகுரு வேதாகமமாமணி சோ. இரவிச்சந்திரக் குருக்கள் அவர்கள் பிரதான கும்பத்தை அபிஷேகம் செய்கிறார்.





உ
சிவமயம்







## திருக்கோணமலை அன்புவழிபுரம் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய

## ஆவர்த்தன பிரதிஸ்டா

# மகா கும்பாபிஷேகம்

**01 – 09 – 2000**

*திருச்சிற்றம்பலம்*

*கணபதி ரூப தியானம்*

மாணிக்கக்கும்பம் மடுத்த துதிக்கை யேந்தி
ஆணிநிறத்துடன் அங்குச பாசமும்
செங்குவளை மலரோடு செவ்வாழைப் பழங்கொண்டு
தங்குதிரு மகளோடருள் தா.

*விநாயகப் பெருமான் அடியார்களே!*

இறையருளோங்கும் இலங்காபுரியில் தெட்ஷண கைலாயமெனப் போற்றப்படும் திருக்கோணமலை நகரில் இயற்கை எழில்மிகு அன்புவழிபுர பதி மேவும் ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையாருக்கு அடியார்களின் பெரும் முயற்சியால் கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், ஸ்பன மண்டபம், நாகதம்பிரான், வைரவர், மணிக்கோபுரம் ஏக தளவிமானமும், அலங்கார சிற்ப வர்ண வேலை அமைப்புகளுடன் புதிதாக சிறப்புற நிர்மாணிக்கப்பட்டு நிகழும் விக்கிரம வருஷம் ஆவணி மாதம் 16ம் நாள் (01. 09. 2000) வெள்ளிக்கிழமை திருதியை திதியும், அத்த நட்சத்திரமும், அமிர்தசித்த யோகமும் கூடிய காலை 7.13 மணிமுதல் 9.00 மணிவரையுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்த வேளையில் மூலமூர்த்தி விநாயகப் பெருமானுக்கும் நூதன உற்சவ மூர்த்திக்கும், பரிவார மூர்த்திகட்கும் ஆவர்த்தன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளதால் விநாயகப்பெருமான் அடியார்கள் இக்கிரியைகளில் கலந்து வேழமுகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

## கிரியா கால விபரம்

**30–08–2000** புதன்கிழமை காலை **7.30** மணிக்கு கர்மாரம்பம், ஆசாரியவர்ணம், விக்னேஸ்வரபூஜை, அனுக்ஞை, தனபூஜை, திரவியபாகம், கணபதிஹோமம், யந்திரபூஜை, நூதன மூர்த்திகள், பூர்வாங்க கிரியைகள்.

மாலை **4.00** மணிக்கு பிரவேசபலி, கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், கலாகர்ஷனம், கும்பம்யாகசாலா பிரவேசம், யாகபூஜை, வேததோஸ்திர தேவார பாராயணம்.

இரவு **7.30** மணிமுதல் **8.50** மணிவரை ஸ்தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யத்திரஸ்தாபனம், பிம்மஸ்தாபனம், அஸ்டபந்தனம்.

**31–08–2000** வியாழக்கிழமை காலை **8.00** மணிக்கு புண்ணியாக்வாசனம், தைலாப்பியம் (காலை **8.00** மணிமுதல் மாலை **5.00** மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்) யாகபூஜை, விசேடதிரவிய ஹோமம் வேத தோஸ்திர பாராயணம்.

மாலை **5.00** மணிக்கு பூதசுத்தி, யாகபூஜை, பிம்பசுத்தி, மூர்த்திரட்க்ஷா பந்தனம், ஷடத்துவநியாசம், ஸ்பர்சாகுதி, தீபாராதனை வேத தோஸ்திர தேவார பாராயணம்.

**01–09–2000** வெள்ளிக்கிழமை காலை **5.00** மணிக்கு யாகபூஜை, மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, வேததோஸ்திர தேவார பாராயணம், யாத்திராதானம், அந்தர்பலி, சர்வமங்கள வாத்தியங்கள் முழங்க கும்ப வீதிப் பிரதட்ஷணம்.

காலை **7.40** மணிக்கு ஸ்தூபி அபிஷேகம்

காலை **8.00** மணி முதல் **9.00** மணிவரை மஹா கும்பாபிஷேகம், தசதர்ஷனம், எஜமான் அபிஷேகம், மஹாஅபிஷேகம், விசேட பூஜைகள், ஆசியுரைகள், வாழ்த்துரை

மாலை **6.00** மணிக்கு விஷேட பூஜைகள், நடைபெற்று விநாயகப் பெருமான் வீதியுலா நடைபெறும்.

*பிரதிஸ்டா பிரதம குரு*
"பக்தகிரியா திலகம்", "வேதாகமமாமணி"
**சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்**
(பிரதம குரு ஆதீனகர்த்தா பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்)

*பிரதிஸ்டா குருமார்*
சிவஸ்ரீ இ. ஆனந்தநித்தியானந்த குருக்கள் ( கிருஷ்ணன் கோயில்)
சிவஸ்ரீ வ. சிவகுமார குருக்கள் (திருக்கோணமலை)
சிவஸ்ரீ சி. யோகீஸ்வரக் குருக்கள் (திருக்கோணமலை)
சிவஸ்ரீ மு. பாலச்சந்திரக்குருக்கள் (சனீஸ்வரன் கோவில்)
சிவஸ்ரீ பூ. சுதாகரசர்மா (மட்டக்களப்பு)

சர்வபோதகம்
""சாதக திலகம்"
**சிவஸ்ரீ யோ. பத்மநாப குருக்கள் (கண்டி)**

*சாதகாச்சாரியார்*
சிவஸ்ரீ சி. சிவசண்முகதாணந்த சர்மா (திருக்கோணமலை)
சிவஸ்ரீ வ. நகுலேஸ்வர சர்மா (திருக்கோணமலை)
சிவஸ்ரீ அ.சுப்பிரமணிய சர்மா (பாலையூற்று முருகன் கோயில்)
சிவஸ்ரீ க. பாலச்சந்தர சர்மா (இரத்தினசிங்கப் பிள்ளையார் கோயில்)

**ஆலய கட்டட நிர்மாணம்**
இ. அமரசிங்கம் (குட்டி)

**நூதன மூர்த்தியின் அமைப்பு**
சிற்ப ரத்தினம்
ஸ்தபதி. சிவஜேதிலிங்கம் ஆசாரியார்

**ஆலய வர்ண வேலைகள்**
"சிற்பகலாபானு"
கந்ததாஸ் இரவீந்திரராசா
குழுவினர்
அராலியூர்

**மங்கள வாத்தியம்**
N.K. நாகராசா குழுவினர்

**குறிப்பு : மண்டலாபிஷேகம் தொடர்ந்து 15 நாட்களுக்கு நடைபெறும்**

தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம்
அன்புவழிபுரம்.
திருகோணமலை.
10.08.2000

இங்ஙனம்
கும்பாபிஷேக குழுவினரும்
ஆலய பரிபாலன சபையினரும்



குட முழுக்குக்கான பிரதான கும்பம் த்வஜஸ்தம்ப பிள்ளையார், பைரவர் ஆகிய பரிவார மூர்த்திகட்கான கும்பங்களுடன் வீதி வலம் வரும் காட்சி.



ஸ்தூபி அபிஷேகத்திற்கான கும்பங்கள் பக்தர்கள் புடை சூழ ஸ்தூபியை நோக்கி வீதிவலம் வருதல்.



உத்ஸவருக்கான ஸ்தூபிக்கலங்கட்கு அபிஷேகம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறும் காட்சி.



# ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம்

## ஆசிச் செய்தி

*லோக சமஸ்த சுகினோ பவந்து*

நீண்ட காலமாக அன்புவழிபுரம் மெய்யடியார்களின் முக்கிய கனவு ஒன்று இம் மங்கள கும்பாபிஷேக தினத்தன்று நிறைவேறும். அழகான காட்சியுடன் ஒரு பெரும் தரிசனமாகத் திகழ்கின்றது. புனரமைக்கப்பட்ட விநாயகர் ஆலயம் அன்புவழிபுரம் வாழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். சைவமில்லை இனிமேல் தமிழனில்லை எனக் கூறவேண்டும். திருக்கோயில்கள் பொறுத்தவரை நித்திய பூஜையுடன் வெறும் பொங்கற் பானை அல்லது வெறும் நேர்த்திக்கடன் ஆன்மீக வளர்ச்சிக்குப் போதாது. பக்தர்கள் அசையாமல் விசுவாசத்துடன் ஆலய வழிபாட்டில் கலந்து கொள்ள வேண்டும். ஸ்ரீ சைதன்ய மகராஜ் கூறினார் "பகவானே, அடியேன் உங்கள் அசையாமல் சிஷ்யன். என்ன நடந்தாலும் உங்கள் காலடியில் நிற்பேன்."இவ்வாறான நிஷ்காமிய பக்தி முறையில் நாம் பின்பற்ற வேண்டும். எல்லாம் கர்மவினை அடிப்படையில் இடம்பெறும். ஜீவனுக்கு நன்மை வந்தால் இறைவனைப் பாராட்ட வேண்டும். தீமை நடந்தாலும் தன்னுடைய தீய கர்மவினைப்பலன் எனக் கருத வேண்டும். ஆலயங்களில் பஜனையோசை கேட்க வேண்டும், அறநெறிப் பாடசாலைகள் நடத்த வேண்டும், பக்தி உபநியாசங்கள் ஆயத்தப்படுத்த வேண்டும். மேலும் ஆலய வருமானத்தில் ஒரு பகுதி அனாதைகளுக்கு, வறிய மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும். விநாயகர் ஆலயத்திற்கு கல்நாட்டு விழா தினத்திலிருந்து இன்றுவரை ஆலய பரிபாலன சபையினரின் ஓயாத முயற்சி காரணத்தால் புதிய திவ்ய பீடம் கட்டப்பட்டுள்ளது. சகல பக்தர்கள் மற்றும் ஊர்வாசிகள் ஆசிபெற வேண்டும் என்பதை பிரார்த்திக்கின்றோம்.

சுவாமிஜீ தந்திரதேவா மகராஜ்
தலைவர், அகில இலங்கை இந்து சமய அபிவிருத்திச் சபை.

# மகா கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசியுரை

*"ஸர்வ விக்ந ஹரம் தேவம் ஸர்வ விக்ந விவர்ஜிதம் ஸர்வ ஸித்தி ப்ரதாகாரம் வந்தே ஹம் கண நாயகம் "*

*தெட்ஷிண கைலாசம் எனப் போற்றப்படும் இலங்கையின் கிழக்குக் கரையிலே அமைந்துள்ள திருகோணமலைப் பதியினிலே நீண்ட காலம் தொடக்கம் இன்றுவரை விநாயகர் வழிபாடு ஆனது மிகச் சிறப்புற்று விளங்குவது குறிப்பிடத் தக்கதொன்றாகும்.*

*விநாயகருக்கு என ஆலயங்கள் அமைத்து ஆகம விதிப்படி தினசரி பூஜைகளும் உற்சவங்களும் இடம்பெற்று வருகின்ற அதேவேளை திருகோணமலை நகரத்தில் இருந்து 3 மைல் தொலைவில் அமைந்துள்ள அன்புவழிபுரக் கிராமத்தின் மத்தியிலே விநாயகருக்கு எனப் பழம்பெரும் ஆலயமாகத் திகழ்வது தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயமாகும்.*

*இவ்வாலயம் நீண்ட காலமாக மடாலயமாக இருந்து வந்து பூஜைகளும் இடம்பெறுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் அன்புவழிபுரத்தில் வசிக்கின்ற மக்களும் ஆலய நிர்வாகத்தினரும் அங்குள்ள ஏனைய பெரியோர்களின் ஆதரவினால் ஆகம விதிப்படி இவ்வாலயம் அமைக்கப்பெற்று 01.09.00அன்று குடமுழுக்கு விழா எனப்படும் கும்பாபிஷேகம் நடைபெற்று மக்களுக்கு எல்லாம் வல்ல தில்லையம்பலப் பிள்ளையாரின் திருவருள் கிடைத்து நல்வாழ்வு வாழ வேண்டும் என நல்லாசிகள் கூறுகின்றேன்.*

**சோ. இரவிச்சந்திரக் குருக்கள்**
*பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்*
*திருகோணமலை.*

# ஓம் விக்னேஸ்வராய நமஹ

*அன்புவழிபுரம் ஸ்ரீ தில்லையம்பல பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவர் அவர்களின் ஆசியுரை*

**ஓம்**
**சுக்கிலாம் பரதரம் விஷ்ணும்**
**சசிவர்ணம் சதுர்புஜம்**
**ப்ரசன்ன வதனம் த்யாயேத்**
**சர்வ விக்னோப சாந்தயே.**

எமது ஸ்ரீ தில்லையம்பல பிள்ளையார் ஆலயம் பழமையும் தொன்மையும் வாய்ந்ததாகும். எமது முன்னோர்களின் அரும்பெரும் முயற்சியினால் இவ்வாலயம் அமைக்கப்பட்டதை எமது மக்கள் நன்கு அறிவர்.

ஆலய பரிபாலன சபையினர் ஆலயத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வந்துள்ளனர். இப்பிரதேசத்தில் ஏற்பட்ட வன்செயல்களால் இந்த ஆலயம் பாதிக்கப்பட்டாலும் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆலய வழிபாட்டுக்கு உதவியதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இவ்வாலயத்தை புதிதாக நிர்மாணித்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்பதை எமது கிராமத்து மக்கள் ஒரு மனதோடு ஏற்றுக் கொண்டு 1993ஆம் ஆண்டு மாசி மாதம் ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு சகலரும் செயற்பட்டதை நினைக்கும்போது பேரானந்தம் அடைகின்றோம்.

எமது ஆலய பரிபாலன சபையின் செயலாளர், பொருளாளர், உபபொருளாளர், உபதலைவர், உபசெயலாளர், கும்பாபிஷேக குழுவினர், ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆலய திருப்பணிக்காக உதவினார்கள். பொது மக்களும் நாங்கள் அழைத்த போதெல்லாம் மனமுவந்து ஒவ்வெருவரும் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாமல் பொருளுதவி, நிதி உதவி, உடல் உழைப்பு போன்றவற்றை உடனுக்குடன் செய்து இவ்வாண்டு ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அரும்பாடுபட்டு உழைத்தனர்.

எமது ஆலய பூசகர் அவர்களும், சிற்பாசாரிமார்களும் வேண்டிய ஒத்தழைப்பினை வழங்கினார்கள். இவர்கள் அனைவருக்கும் நன்றி கூற வேண்டியது எமது கடமையாகும்.

அனைவருக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டும். எமது ஊர் சிறந்து விளங்க வேண்டும் என எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க**
**சைவமும் தமிழும் தளைத்தினி ஓங்க**
**சுப மங்களம்.**

**இ. முருகையா**
*ஆலய பரிபாலன சபைத் தலைவர்*
*அன்புவழிபுரம்,*
*திருகோணமலை*

# ஆசியுரை

சிவத்தலங்களில் ஒன்றான கோணேசர் வீற்றிருக்கும் கோணேசர் ஆலயத்தில் இருந்து மிக அண்மித்ததாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் அன்புவழிபுரம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் கண்ணே அருள் பாலித்துக் கொண்டிருப்பவர் தான் "ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையாராவார்". கடந்த பல ஆண்டுகளாக புனரமைப்பு மேற்கொள்ளப்படாமல் இருந்த இவ் ஆலயத்தினை தற்போதுள்ள நிர்வாக சபையினர் மிகக் கரிசனையோடு புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் காண முன்வந்திருப்பது மிகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

கும்பாபிஷேக விழாவோடு சேர்ந்து சிறப்பு மலர் ஒன்றினையும் விழாச் சபையினர் வெளியிட உள்ளமை மேலும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இம்மலரிலே சமயப் பெரியார்களின் சிறப்பான கருத்துக்களும், கட்டுரைகளும், அறிஞர்களின் ஆக்கங்களும் இடம் பெறும் என எதிர்பார்க்கின்றேன். கும்பாபிஷேக விழாவும், சிறப்பு மலர் வெளியீடும் இனிதே நடைபெற நல்லாசி கூறுவதில் மன நிறைவடைகின்றேன்.

G. KRIUSHNAMURTHIY

*CHIEF SECRETARY NEP*

*TRINCOMALEE.*

# வாழ்த்துச் செய்தி

திருகோணமலை நகரின் கண்ணேயிருந்து ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அன்புவழிபுரம் கிராமத்தின் சகல மக்களுக்கும் அருள்பாலிக்கும் ஸ்ரீ தில்லையம்பலப்பிள்ளையார் கும்பாபிஷேக விழா மிகச் சிறப்பாக நடை பெறவிருப்பது மனதிற்குப் பேருவகையைத் தருகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் காடர்கக் கிடந்த இப்பகுதிக்கு மக்கள் சென்று காட்டை வெட்டி கிராமமாக்கி மக்கள் எல்லோரும் அன்போடு இணைந்து ஏற்படுத்தியமையாலேயே "அன்புவழிபுரம்" எனப் பெயர் வந்ததென்பர். இங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தியும் "கல்லன்பத்தை" என்ற இடத்திலிருந்து தருவிக்கப்பட்டதென அறியக் கிடக்கின்றது. பல அற்புதங்கள் நிகழ்த்திய மூர்த்தியே இங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ளார். கற்பக்கிரகம், அர்த்த மண்டபம் இரண்டுமே கல்லால் கட்டப்பட்டிருந்த இவ்வாலயத்தினை மக்கள் பெருமுயற்சி எடுத்து புனர்நிர்மாணம் செய்து கும்பாபிஷேக விழாவினையும் நடாத்த முன்வந்திருப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். சிறந்த நிருவாக சபையினைக் கொண்டதாக ஆலய பரிபாலன சபை அமைக்கப்பட்டு புனரமைப்பு பணிகளையும் மேற்கொண்டு வருவதோடு கும்பாபிஷேக விழா தொடர்பாகச் சிறப்பு மலரொன்றையும் வெளியிடவுள்ளனர். இம்மலருக்கு ஆசியுரை கூறுவதில் மனநிறைவடைவதோடு எல்லாம் வல்ல எம்பெருமானை ஆசிவேண்டி நிற்கின்றேன்.

**க. பரமேஸ்வரன்,**
*செயலாளர்.*

# வாழ்த்துச் செய்தி

அன்புவழிபுரம் ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம் காண்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்துக்களுடைய வாழ்வில் கோவில்களுக்கும், சமூகத்துக்கும் இடையிலான உறவு அல்லது இயைபு என்பது மிகவும் பிரிக்கமுடியாத ஒரு பிணைப்பாக இருந்து வருகின்றது. "கோவில் இல்லாத ஊரில் குடியிருக்கக்கூடாது" என்பது எமது சமய மரபில் ஆழ வேரூன்றிவிட்ட ஒரு நம்பிக்கையாகும். மக்கள் தமக்கிடையேயான வேறுபாடுகளை எல்லாம் மறந்து, ஆன்மீக அடிப்படையில் ஒன்று கூடுகின்ற ஒரு இடமாக ஆலயங்கள் அமைகின்றன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த திருத்தலங்கள் பலவும் இன்று பல்வேறு காரணங்களினாலும், எமது கண்முன்னாலேயே அழிந்தும், சிதைந்தும், மறைந்தும் கொண்டிருப்பதனை நாம் மனவேதனையுடன் கண்டு கொண்டிருக்கின்றோம்.

அன்பினால் இணைந்து குடியேறிய அன்புவழிபுரக் கிராம மக்கள் தமக்கொரு வழிபாட்டுத் தலமாக இத்தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்தை மீள் நிர்மாணம் செய்திருக்கிறார்கள். இம்மீள் நிர்மாணிப்பிலே இக்கிராம மக்களுடைய ஆழ்ந்த பக்தியுணர்வையும், சமய நம்பிக்கையினையும் கண்டு கொள்ள முடிகின்றது. இக்கிராம மக்களை எல்லாம்வல்ல தில்லையம்பலப் பிள்ளையார் பெருமான் நல்லருள் பாலித்துக் காத்தருள வேண்டும் எனப் பிரார்த்திப்பதுடன், இக்கும்பாபிஷேக நிகழ்வையொட்டி வெளிவருகின்ற விழா மலர் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**க. பரமலிங்கம்,**
*செயலாளர்,*
*மாகாண பொது நிர்வாகம், உள்ளூராட்சி,*
*கூட்டுறவு, வீதி அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி,*
*கைத்தொழில், முகாமைத்துவ அமைச்சு,*
*வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை.*

# வாழ்த்துரை

அன்புவழிபுரம் ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் காணும் நன்னாளையிட்டு எனக்கு இவ் உரையை வழங்குவதற்குச் சந்தர்ப்பம் அளித்த எல்லாம் வல்ல விநாயகர் பெருமானுக்கு வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

ஆன்மீகம் தாழ்ந்து கொண்டு அராஜகம் தலைத்தூக்கிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் சைவ மக்களுக்கு கோவில் வழிபாட்டையும், ஆன்மீகத்தில் ஈடுபாட்டையும் வளர்ப்பதற்காக இக் கைங்கரியத்தில் முன்னின்று உழைக்கும் சுவாமி தந்திரதேவா அவர்கட்கும், இவ் ஊர்வாசிகட்கும் இறைவனின் பேரருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். தனது உழைப்பில் ஒரு பகுதியை ஆலயத் திருப்பணிக்காக மனம் உவந்து நல்கி இவ் ஆலயத்தைச் சிறப்புற அமைப்பதற்கு காரணமாக இருக்கும் அனைவருக்கும் வேழ முகத்து விநாயகர் திருவருள் பாலிப்பாராக.


**வ. வேலும்மயிலும்**


*பிரதேச செயலாளர்,*

*பிரதேச செயலகம்,*

*திருகோணமலை.*

ஆரம்ப காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டு
ஸ்ரீ தில்லையம்பல விநாயகருக்கு
பூசை நடைபெறும்போது
குழுமியிருக்கும் பக்தர்களைக்
காணலாம்.





நீண்ட காலமாக ஆலயத்துக்கு
தொண்டு செய்த திரு. முத்துக்குமாரு
அவர்கள்.

பழைய கோயில் பூஜை சில ஆண்டு
காலமாக தொண்டு செய்த
திரு. சைவசித்தாந்தமணி
செ. அருளானந்த அர்ச்சகர்



ஓம்

# ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் வரலாறு

திருகோணமலை நகரத்திலிருந்து அனுராதபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் தவதிரு குன்றகுடி அடிகளாரால் பெயர் சூட்டப்பெற்ற அன்புவழிபுரம் என்ற புதிய குடியேற்ற கிராமம் இருக்கின்றது. இலங்கை சுதந்திரமடைந்த பின் தோன்றிய சைவத்தமிழ் கிராமம். காட்டை வெட்டி நாடாக்கி தமிழ் மக்கள் அன்பினால் இணைந்து 1957 ஆம் ஆண்டு குடியேறினார்.

இங்கு குடியேறியவர்களுக்கு வழிபாட்டுக்கு கோவில் இல்லாத காரணத்தினால் இங்கு குடியேறிய திரு.க.கந்தையா என்பவர் மக்களுக்கும், தனது வழிப்பாட்டுக்குமாக ஒரு கோவிலைக் கட்டினார். கோவிலில் பிரதிஷ்டை செய்வதற்குப் பிள்ளையார் திருவுருவமொன்றைச் செய்விப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும்போது, இங்கிருந்து பன்னிரெண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ளதாகிய கல்லம்பத்தை என்னுமிடத்தில் நான் இருக்கின்றேன். என்னை நீ கட்டிய கோவிலில் வைத்து ஆதரிப்பாயாக" என்று கனவிலே பிள்ளையார் கூறினாராம். இதனால் கல்லம்பத்தை என்ற இடத்தைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினார்.

கல்லம்பத்தை என்பது பண்டைக் காலத்தில் மக்கள் வாசம் செய்த பழைய கிராமமாகும். இப்போது காடாய்க் கிடக்கின்றது. அங்கே ஒரு குளம் இருக்கின்றது. அந்தக் குளத்து நீரைப்பாய்ச்சி விவசாயம் செய்து மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். மக்கள் அங்கு வாழ்ந்த காலத்தில் ஆலயமொன்றிருந்து அழிந்து விட்டது. இயற்கை ஏதுக்களினாலோ அன்றி வேறு காரணத்தினாலோ அந்த இடத்தை விட்டு மக்கள் வெளியேறி பின் அங்கிருந்த ஆலயம் பராமரிப்பற்று பற்றைக் காடு வளர்ந்து கோவில் அழிந்து விட்டது. பல்லாண்டுகளுக்குப் பின் அந்த இடத்திற்கு திரு. கதிர்காமர் என்பவர் சென்று விவசாயம் செய்து வந்தார். யானை, புலி, கரடி முதலிய கொடிய வன விலங்குகளின் எதேச்சையான வாசஸ்தலமாயிருந்த பெரும் காட்டுப் பிரதேசத்தில் கதிர்காமருக்கு அங்கிருந்த பிள்ளையார்தான் துணை. வேறு மனித நடமாட்டமே இல்லை.வேட்டையாடுபவர்கள் மாத்திரம் அங்கு இருந்தனர். அப்படியான இடத்தில் கதிர்காமர் துணிச்சலாக விவசாயம் செய்து வந்தார். விதைத்துப் பயிராகிய பின் பயிருக்கு மிருக அழிவு வராமல் எல்லாவற்றையும் நீயே பார்த்துக்கொள். பாதுகாப்பது உன் பொறுப்புத்தான் என்று கூறிவிட்டு வந்து விடுவாராம். பின்பு அறுவடைக்குத்தான் அங்கு போவார். அந்த இடத்தில் பகலிலும் இரவிலும் யானைகள் எதேச்சையாக சுற்றித்திரியுமாம். அப்படியிருந்தும் கதிர்காமருடைய காவலாளி போல் பிள்ளையார் பயிரைப் பாதுகாத்துக் கொடுப்பாராம். ஒருமுறை நெற்பயிர்கள் மழையின்மை காரணமாக அழியும் நிலைஏற்பட்டது.இதைப்பார்த்துப் பொறுக்க முடியாத கதிர்காமர் இன்று மழை பெய்ய

வேண்டும். இல்லையேல் உன்னை கோடாரியால் கொத்துவேன் என்று சொல்லி கோடாரியால் கொத்தினார். இரவு முழுவதும் மழை. இத்தழும்பு இன்றும் மூர்த்தியின் வயிற்றடியில் காணலாம்.

இந்தச் செய்திகளை அறிந்த கந்தையா கிராம வாசிகளின் உதவியுடன் பல சிரமங்களின் மத்தியில் பிள்ளையாரை எடுத்து வந்து 1958ஆம் ஆண்டு அன்புவழிபுரம் பிள்ளையார் கோயிலை ஸ்தாபித்து தில்லையம்பலப் பிள்ளையார் என்று திருநாமமும் சூட்டினார். அன்று முதல் அங்குள்ள மக்கள் இவ்வாலயத்தில் வழிபாடு செய்து வருகின்றார்கள். ஆலயம் சிறியது. ஆனால் மூர்த்தி கீர்த்தியுடையது. பூசைக்குரிய பணிகளைத் தாடி சாமியாரும் கிராம வாசியாகிய திரு. முத்துக்குமார் (அப்பா) மேற்கொண்டு வந்தார்கள்.

கற்பக்கிரகம், அர்த்த மண்டபம் இரண்டும் கல்லால் கட்டப்பட்டுள்ளன. மடாலயம், மகா மண்டபம் ஆகிய இரண்டும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தம்பதிகளுக்கு நீண்ட காலமாக மகப்பேறு அற்ற நிலையில் இருந்தனர். திருமூர்த்திக்கு வேண்டுதலை முன்வைத்தனர். அவ்வருடத்திலேயே மகப்பேறு கிடைக்கப்பெற்று அக்கணமே அவ்வேலைகள் தம்பதிகளால் செய்து கொடுக்கப்பட்டு மண்டபம் ஓலையால் வேயப்பட்டு இருக்கின்றது. கருவறையில் பிள்ளையாரும், நாகதம்பிரானும், வைரவவர் சூலமும் வைக்கப்பட்டுள்ளது.

1960ஆம் ஆண்டு கிராம வாசிகளினால் ஆலய பரிபாலன சபை ஒன்று அமைக்கப்பட்டு இன்றுவரை இவ்வாலயம் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இருப்பினும் திரு. கந்தையா அவர்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக ஆலயம் பூட்டப்பட்டது. ஒருசில பெரியோரின் முயற்சியினால் ஐவர் கொண்ட அறங்காவல் குழு அமைக்கப்பட்டு ஆலய பரிபாலன சபையினரிடம் கையளிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமைகளிலும் விசேட தினங்களிலும் சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை, ஆவணி சதுர்த்தி போன்ற காலங்களிலும் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

1968ஆம் ஆண்டு புதிய ஆலயம் ஒன்றை அமைப்பதற்காக அத்திவாரம் இடப்பட்டதுடன் தீர்த்தக்கிணறும் கட்டப்பட்டது. நாளடைவில் இம்முயற்சி பயன் அற்றதாகப் போனமை மிக வேதனைக்குரியதாகும்.

1983ஆம் ஆண்டு நடைபெற்ற வன் செயலில் ஆலயம், நூல் நிலையம் ஆகியன சேதமடைந்தன. மக்கள் இடம்பெயர்ந்து சென்ற பொழுதும் சில பெரியோர் ஆலயத்தை தினமும் சுத்தம் செய்து தீபம் ஏற்றி வந்ததுடன், வெள்ளிக்கிழமை பூசையும் நடத்தி வந்தனர்.

ஆலய சபை சில அன்பர்களின் முயற்சியினால் 1993.02.28 ஆம் திகதி புதிய ஆலயத்திற்காக அடிக்கல் சுவாமி தந்திரதேவா அவர்களால் இடப்பட்டு சமய முன்னோடிகள், கிராமத்தில் வாழும் இளைஞர்கள், அன்பர்கள், பொதுமக்களின் உதவியினால் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு புதுப்பொழிவு பெற்று விக்கிரம வருடம் ஆவணி மாதம்16ஆம் (2000.09.01) திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

(சில குறிப்புகள் திரு. சீவரெட்னம் ஐயா சாஸ்திரிகளின் நாளாந்த தினக்குறிப்பில் இருந்து எடுக்கப்பட்டது).

தொகுப்பு : திரு. ப. கந்தசாமி.



புதிய ஆலயத்துக்கான கல் நாட்டு விழாவில் சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்கள் முதலாவது கல் வைக்கின்றார்.



கல் நாட்டு விழாவில் ஆலய பரிபாலன சபையினர், ஏனைய அடியார்களுடன் சுவாமி தந்திரதேவா அவர்கள்.

# விநாயகரது சிறப்புமிகு தத்துவங்கள்



அறுவகை சமயங்களுள் ஒன்றாக விளங்குவது காணபத்தியம் ஆகும். இச் சமயத்துக்குரிய கடவுள் கணபதி என்ற நாமத்தால் போற்றப்படும் விநாயகர் ஆவார். கணங்களின் தலைவர் எனப் போற்றப்படுவதால் கணபதி எனவும் தனக்கு மேல் தலைவர் இல்லாதவர் எனக் கூறப்படுவதால் விநாயகர் எனவும் அழைக்கப்படுகின்றார். இதே போல் விக்கினங்களை (தடைகள்) தீர்ப்பவர் என்பதால் விக்கினேஸ்வரர் எனவும், ஐந்து கரங்களை உடையவர் என்பதால் ஐங்கரன் எனவும், ஆனைமுகத்தை உடையவர் என்பதால் ஆனைமுகன் எனவும் இன்னோரன்ன பல பெயர்களால் போற்றப்படுகிறார். விநாயகரது ஒவ்வொரு வடிவமும் ஒவ்வொரு தத்துவத்தை எமக்கு எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

ஆனைமுகமும், பருத்த வயிறும், மோதகம் ஏந்திய திருக்கரமும் கணபதியின் இன்பமே வடிவான பரிபூரணத் தன்மையைக் காட்டுவதாக அமைகிறது. எலியாகிய ஆன்மாவை வாகனமாகக் கொண்டு அண்ட சராசரங்களையும் தமது திருவயிற்றினுள் உள்ளடக்கி கருணை ஆகிய மதநீரைப் பொழிந்த வண்ணம் விநாயகப்பெருமான் விளங்குகிறார். கன்னமதம் முருகியல் ஞானம் எனவும் கபோல மதம் ( கபோல கழுத்து) ஆன்ம ஞானம் எனவும் பீஜமதம் பிரம்ம ஞானம் எனவும் கொள்ளப்படும்.

விநாயகரின் ஐந்து திருக்கரங்களும் ஐந்தொழில் தத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. பாசம் ஏந்திய கை படைத்தலையும், தந்தம் ஏந்திய கை காத்தலையும், அங்குசம் ஏந்திய கை அழித்தலையும், தும்பிக்கை மறைத்தலையும், மோதகம் ஏந்திய கை அருளலையும் குறிப்ப வையாகும்.

கணபதியினுடைய தும்பிக்கை ஒங் காரமாகிய பிரணவ வடிவமானதாகும். அதற்கு அடையாளமாக “உ” என சுழியிடுவது வழக்கம். இதில் வட்டமாக இடும் சுழி விந்து ஆகிய சக்தியையும் கீறாகிய கோடு நாதமாகிய சிவத்தையும் குறிப்பதால் சக்தி, சிவம் ஆகிய இரண்டினதும் உள்ளடக்கமாகப் பிள்ளையார் சுழி அமைந்தது. அகர உகர மகர சேர்கையாலாகும்.

ஓம் எனும் பிரணவ கணபதியுடைய தும்பிக்கை குறியீடாகப் புலப்படுத்தும் எனக் கொள்ளலாம். கணபதியின் தந்தம் முறிக்கப்பட்ட வலப்பாகம் பெண்மையும் இடப்பாகம் ஆண்மையும் கொண்டதாகக் கூறுவர். மகா கணபதிக்கு பத்து கரங்கள் குறிக்கப்படும். அவற்றுள் ஒரு பக்கம் ஐந்து கரங்களும் முறையே விஷ்ணு, சிவன், மன்மதன், வராகம் (பன்றி), தாம் ( கணபதி) ஆகிய ஐவரையும் குறிக்கும். மற்றைய ஐந்து கரங்களும் இலக்குமி, பார்வதி, இரதி, பூதேவி, வல்லபை ஆகிய ஐவரையும் குறிக்கும். பிரமம் விலங்காகவும் மனிதனாகவும் தோற்றுவ தென்பதைக் காட்ட அவருக்கு ஆனைமுகமும் மனித உடலும் உள்ளன.

கணபதி கிருயுகத்தில் தீ போன்ற நிறத்துத் திருமேனியும் சிங்க வாகனமும் பத்துத் திருக்கரங்களும் கொண்டு விநாயகர் என்ற திருநாமத்தோடு விளங்குவார். திரேதயுகத்தில் ஆறு திருக்கரங்களும் வெண்ணிற திருமேனியும் மயில்வாகனமும் கொண்டு மயூரேசர் என அழைக்கப்படுவார். துவாபரயுகத்தில் இவருக்கு நான்கு கரங்களே இருக்கும். இக்காலத்தில் இவர் திருநாமம் கஜானனர். மேனியின் நிறம் சிகப்பு. கலியுகத்தில் புகை நிறம் (கபில நிறம்) இதன் காரணத்தால் கணபதிக்குக் கபிலன் என்ற திருநாமமும் வழங்கும். பூண்டு தும்ரகேது என்ற திருநாமத்தோடு இரு திருக்கரங்களும் குதிரை வாகனமும் உடையவராய் விளங்குவார். (இது காணபத்தியர் கருத்து). ஆனால் நான்கு திருக்கரங்களோடு தும்பிக்கையும் சேர்த்து அவரை ஐங்கரனாகவே மூர்த்தம் அமைத்து வழிபடுகின்றோம்.

வடமொழியில் உள்ள எழுத்துக்கள் 51. இந்த ஐம்பத்தோரெழுத்துக்களினதும் மூல மாய்பிரணவமாய் நின்றொலிக்கும் கணபதிக்கு ஐம்பத்தொரு மூர்த்தங்கள் உண்டு. அவற்றுள் பாலகணபதி, தருணகணபதி, பத்தகணபதி, வீரகணபதி, சக்திகணபதி, துவஜகணபதி, சித்திகணபதி அல்லது பிங்கல கணபதி,சுப்ர கணபதி முதலாக முப்பத்தி இரண்டு மூர்த்தங்கள் வணக்கத்துக்குரியனவாகும்.

இவ்வாறு சிறப்புமிகு தத்துவங்களை உடைய விநாயகப் பெருமான் திருகோணமலை பதியினிலே அன்புவழிபுர கிராமத்தின் மத்தியில் ஐங்கரங்களுடன் வீற்றிருந்து அருள்பாலிப்பார் என்பது திண்ணம்.

க. பாலச்சந்திர சர்மா

# வினை தீர்க்கும் விநாயகன்

திரு. கெ. சித்திரவேலாயுதன், *பிரதி அதிபர்,*
*தி. கலைமகள் வித்தியாலயம்.*

"**கோ**யில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி."திருக்கோயில் இல்லாத திருவிலூர்– அது ஊரல்ல அடவி காடே" என்பது அப்பர் தேவார வாக்கு. இக்கூற்றுக்களுக்கேற்ப உலகில் தமிழ் மக்கள் தாம் வாழும் இடங்களில் எல்லாம் கோயில்கள் அமைத்து வழிபாடாற்றி வருதல் மரபாகி விட்டது. திருகோணமலை மாவட்டத்தில், "கோணேசர் பூமியில் அங்குலத்துக்கொரு லிங்கம்" என்று யாரோ சொன்னது போல் எங்கும் ஆலயங்கள் காணப்படுகின்றன. இந்த வகையில் இதற்கு விதிவிலக்கின்றி அன்புவழிபுர மக்களும் தமது வழிபாட்டுக்கெனத் "தில்லையம்பலப் பிள்ளை யார்" என்ற பெயரில் திருக்கோயில் அமைத்து அதற்கு "குடமுழுக்கு விழா" நிகழ்த்தும் இவ்வேளையில் வெளியிடுகின்ற கும்பாபிஷேக மலருக்கு "வினை தீர்க்கும் விநாயகன்" என்ற தலைப்பிற் சில கருத்துக்களைத் திரட்டிக் கட்டுரையாக்கித் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஔவைப் பிராட்டியை ஒரு சமயம் முருகப் பெருமான் பேட்டி கண்டபோது, உலகில் இனியது எது? கொடியது எது? பெரியது எது? அரியது எது? என்று பல கேள்விகளைத் தொடுத்தார். இவற்றுள் "அரியது எது?" என்ற கேள்விக்கு விடை சொல்ல வந்த பாட்டி,

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்று கூறிவிட்டு அத்துடன் நின்று விடாமல் "மானிடராயினும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது" என்றார். அங்ஙனம் ஊனம் எதுவுமின்றிப் பிறப்பினும் "ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது" என்றார். "ஞானமும் கல்வியும் நயந்த காலையும் தானமும் தவமும் தாம் செய்தல் அரிது" என்றார். அப்படி யாராவது தானமும் தவமும் தாம் செய்வாராயின் வானவர் நாடு வழி திறந்திடுமே" என்றார். "வானவர் நாடு" என்று பிராட்டி பகர்ந்தது வானுலகமாகிய சுவர்க்கலோகத்துக்குச் செல்லக் கிடைக்கும் முத்திப் பேற்றினையே.

எனவே மண்ணுலகில் அரிதான மானிடப் பிறவியினை எடுத்த நாங்கள் பிறவியைப் பெரிதென்று வாளா இராது, பிறவி எனும் "மாசு" வேருடன் அற வேண்டும் என மனதிலே எண்ணி, எண்ணிய பொருள் எளிதில் முற்றுப்பெறக் கண்ணுதலுடைய களிற்று மாமுகப் பண்ண வனான பிள்ளையாரை உள்ளத்திலே இருத்தி வழிபட வேண்டும் என்பது ஔவையார் பாட்டாலும்,"மண்ணுலகத்தினில் பிறவி மாசற........", எனத் தொடங்கும் புராணத்தினாலும் புரிகின்றதன்றோ.

விநாயகர் பெருமை வாக்கினால் விளம்பி முடித்தற் பாலதன்று. அவர் "சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான அற்புதம் நின்ற கற்பகக் களிறு" ஆவார்.

"முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங்குன்றும்
கன்னங்களவு மிகுந்திடும் காசினிக்
கென்னரு நந்தி யெடுத்தோதினரே".

என்பது நந்திவாக்கியம். இங்கே "முன்னவன்" எனப்படுபவர் இறை குமாரர்களில் மூத்தவராகிய விநாயகப் பெருமானாவார். அவருக்கு உரிய கோயிற் பூசைகள் தடைப்படின் நாட்டு மன்னருக்கே தீங்குண்டாகும். நீர்வளம் குன்றும், நாட்டிலே களவு மிகுந்திடும். இப்படிப் பல விக்கினங்கள் உண்டாகும் என்பது நந்தி வாசகமாகும். விநாயகப் பெருமான் விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமான தன்மையினால் எக்காரியத்தை நாம் செய்ய முற்படும் போதும் அவரை நாம் வணங்கியே தொடங்க வேண்டும். இதற்குத் தேவர்களும் மூவர்களும் ஏவர்களும் விதிவிலக்கல்ல. விநாயகரை மதிக்காமல் தொடங்கிய எக்காரியமும் நிறைவுறாமற் சிதைவுறும் என்பதைப் பல புராண வரலாறுகள் கூறு நிற்கின்றன.

பிள்ளையாரை வணங்காமல் பிரமன் படைத்தல் தொழிலைத் தொடங்கினான். படைத்தவையெல்லாம் பேயும் பிசாசுமாயினவாம்.

**அஞ்சிய பிரமன்** தன் தவறுணர்ந்து குஞ்ச **ரக்கன்றை நினைத்து** ஏகாட்சர மந்திரத்தைச் **செபித்ததும்** விநாயகர் அருள் கொடுத்துச் "**சித்தி**","புத்தி" என்னும் இரு புத்திரி **மாரைப்பெ**ற்று அவர்கள் உதவியால் சிருஷ்டித் **தொழிலைச்** செவ்வனே செய்து முடித்தார்.

இந்திராதி தேவர்களுக்குத் தொந்தரவு கொடுத்த அவுணர்களின் திரிபுரம் ஏரி செய்யத் திருவுளங் கொண்ட சிவனுக்குச் சூரிய சந்திரர்களைச் சில்லுகளாகவும், சக்கரவாள கிரியை அச்சாகவும் கொண்டு பிரமாண்டமான தேரினைத் தேவர்கள் நிர்மாணித்துக் கொடுத்தனர். சிவமூர்த்தி அத்தேரின் மீது ஆரோகணித்துச் செலுத்தத் தொடங்கியதும் அச் சிவன் உறை ரதத்தின் அச்சு மட மடவெனப் பொடியான செய்தியை அருணகிரிநாதர் பின்வரும் வரிகளால் திருப்புகழிலே பாடியுள்ளார்,

*"மும்புரம் ஏரி செய்த அச்சிவனுறை ரதம்*
*அச்சது பொடி செய்த அதி தீரா".*

தேரமைக்கப் புறப்பட்ட தேவர்கள் விநாயகரை வழிபட மறந்தமையால் வந்த வினையை நினைத்து நொந்து நைந்து "ஐந்து கரத்தண்ணலே போற்றி ஆனை மாமுகனே போற்றி" என வழிபட்டதும், பழையபடி அச்சுப் பெருந்தியது. பிரம்மனுக்கும் தேவர்களுக்கும் சிவனுக்குமே இக்கதி என்றால் நாங்கள் விநாயகரை வழிபட மறந்தால் என்ன வினை வந்து மூளுமோ? விநாயகரை வழிபடாதவர்க்கு வந்த வினை கூறும் புராணங்கள் விநாயகரை வழிபட்டு அருள் பெற்றோர் சரிதங்களும் கூறும்.

வியாச முனிவர் விநாயகரை வழிபட்டு மகாபாரத காவியத்தைப் படைத்தார். மகாவிஷ்ணு மதுகைடபர்களால் துன்புறுத்தப்பட்டபோது விநாயகரை வழிபட்டுச் சடாச்சர மந்திரோபதேசம் பெற்று அவர்களை வென்றார். கிருஷ்ணா நதியின் வடகரையிலுள்ள வனத்தில் முருகப் பெருமான் இலக்ஷ விநாயகர் என்னும் மூர்த்தியை அமைத்து வழிபட்டுச் சூரபன் மனாதியோரை வென்றார். நாரதரின் உபதேசப்படி ஆதிசேடன் விநாயக சதுர்த்தி விரதம் அனுஷ்டித்து அவர் அருளால் ஐந்து தலைப் பாம்பாகி நாதர் முடிமேல் அமரும் பாக்கியம் பெற்றார். ஆயிரம் தலைப்பெற்று நானிலத்தையே சுமக்கும் பேறு பெற்றான். ஒரு தலையோடு விநாயகருக்கு உதர பந்தனமானான். (வயிற்றுக்குப் பட்டியானான்). இவ்வாறு விநாயகர் அருள் பெற்று உய்ந்த தேவர் எத்தனை? மாமுனிவர் எத்தனை? மன்னர் எத்தனை?

ஆலயங்களில் நித்திய பூசை நடைபெறும் போது அவதானித்திருப்போமானால், ஓர் ஆலயம் முருகன், சிவன், அம்மன் என்று எந்த மூல மூர்த்தியைக் கொண்டிருப்பினும் அவ்வாலயத்தில் அமைக்கப் பெற்ற விநாயகர் விக்கிரகத்துக்கு முதலில் பூசை செய்த பின்னரே அங்குள்ள மூல மூர்த்திக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பூசை நிகழ்வதைக் கண்டிருப்போம்.

"வித்தியாரம்பம் விரும்பிடும் போதும் உத்தியோகங்கள் உகுற்றிடும் போதும் ஆங் கவன் தன்னை அருச்சனை புரிந்தால் தீங்குறாதெல்லாம் ஜெயமுண்டாகும்" என்று விநாயகர் கதையில் வருவது காணலாம்.

காவியங்கள், புராணங்கள் படைத்த கர்த்தாக்களும், அவற்றுக்குக் காப்புப் பாடல்கள் பாடிவைத்துள்ளார்கள். அந்தக் காப்புப் பாடல்கள் பெரும்பாலும் விநாயகரையே விழித்துப் பாடியவையாயுள்ளன. திருவருட்பயனைப் படைத்த உமாபதி சிவாச்சாரியார் அந்நூலுக்குக் காப்பாக "நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானம் கற்குஞ் சரக்கன்று காண்" என்றார்.

கலைகளைக் கற்பதைச் சுமையாகக் கருதும் மாணவர்களுக்கு இவர் கூறும் ஆலோசனை என்னவெனில் விநாயகரை வழிபட்டால் எந்த வித்தையும் இலகுவில் கற்கலாம் என்பதே. இவ்வாறு விநாயகரின் பெருமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

எனவே நாமும் வித்தக விநாயகனை நித்தமும் கைதொழுது பிறவி வினைதீரப்பெற்று இனிப்பிறவா வரம் பெற்று இனிய வீடுபேறு அடைவோமாக.

*"மண்ணுலகத்தினில் பிறவி மாசற*
*எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்*
*கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்*
*பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்".*



சிவமயம்

# இந்துவாக வாழ்வோம் நாம் இந்து தர்மம் காப்போம்

மனிதனை மனிதனாகவும், மனிதப் பண்புள்ளவனாகவும் உருவாக்கும் மேன்மைமிக்க சமயம் இந்து சமயமாகும். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய சமயம் எனப் பெரியார்கள் கூறுவர். எனவே நாம் இந்து சமயத்தின் மேன்மையையும் அதன் பாரம்பரியப் பண்பாடுகளையும் அறிந்து ஒழுகுதல் அவசியமாகும்.

சுவாமி விவேகானந்தர் வீர இளைஞர்களுக்குக் கூறிய அறிவுரையில் "நமது சமயத்தின் மகத்தான உண்மைகளை உலகமெலாம் எடுத்துச் சொல்லுங்கள், உலகம் அவற்றுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது". எனக் கூறியுள்ளார். அத்தோடு இந்துக்கள் தங்கள் கடந்த கால வரலாற்றை ஆழ்ந்து படிக்கும் அளவிற்கு ஏற்ப அவர்களின் எதிர்காலம் மேலும் மேலும் பெருமைக்குரியதாக அமையும் எனவும் கூறியுள்ளார்.

உயர்ந்த தத்துவங்களையும் இறைவனுடன் இணைக்கும் இலகுவான பக்தி மார்க்க வழியையும் கொண்டுள்ள எமது சமயத்தின் மேன்மை இன்று மேலைநாடுகளில் பல மேலைநாட்டு மக்களை இந்துவாக மாறச்செய்து, அவர்கள் மூலம் பல இலட்சக் கணக்கான இந்து ஆன்மீக தொண்டர்களை உருவாக்கிவருகின்றது. குறிப்பாக "ஹரே ராமா ஹரே கிஷ்ணா" அமைப்பு போன்றவைகளைக் கூறலாம். ஆனால் மேலைநாட்டில் தமது போலித்தன்மையால் வலுவிழந்த சில சமயங்களின் பிரதிநிதிகள் கீழைத்தேய எம் நாடுகளில் பணம், பொருள் போன்றவற்றைக் கொடுத்து எம் நாட்டு இந்துக்களைத் தங்கள் போலி மதத்துக்கு மாற்ற முயற்சித்து வருகின்றனர். எனவே, இந்துக்களே இவ்வாறான விஷமிகளின் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்த வேண்டும். அத்தோடு நாமும் இந்து சமய, கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பின்பற்ற வேண்டும்.

உண்மையிலே இந்து ஒருவன் சைவ உணவினையே உண்ண வேண்டும். ''பிற உயிர்களை வதைத்து உண்டு இன்பம் காண்பது இந்து தருமம் அல்ல''. எங்கள் இந்துப் பண்டிகைகள், பிறந்த தினங்கள், மற்றும் விசேட தினங்கள், விழாக்கள் போன்றவற்றில் கட்டாயம் உயிர்வதை செய்வதையும், அவற்றினை உண்டு இன்பம் காண்பதையும் நிறுத்த வேண்டும்.

ஆலயங்களைப் பொறுத்த வரையில், பூசைகளுடன் ஆன்மீகச் சொற்பொழிவுகள், கூட்டு வழிபாடுகள், தர்ம செயற்பாடுகள் (சமூக சேவைகள்) நடாத்தப்படல் அவசியமாகும். ஆலய வருமானத்தில் குறைந்தது பத்து வீதமாவது வறியோர், அங்கவீனர்கள், விதவைகள், கல்விகற்க வசதியற்ற சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் நலனுக்காகச் செலவிடப்பட வேண்டும்.

திருவிழாக் காலங்களில் ஆலயங்களிலும் ஏனைய ஆலய நிகழ்வுகளிலும் நாதஸ்வரம் போன்றவைகள் பக்தி கீதங்களுடன் இசைக்கப்பட வேண்டும். சினிமா, பொப்பிசைப் பாடல்கள் இசைக்கப்படுவதை ஆலய தர்மகர்த்தா சபைகள் நிறுத்த வேண்டும். மற்றும் சிவராத்திரி போன்ற இந்துக்களின் புனித தினங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படுவதையும் சினிமாப் படக்காட்சிகள் காண்பிக்கப்படுவதையும் ஏனைய பக்தி மார்க்கமற்ற நடவடிக்கைகளையும் இந்து அமைப்புக்களும், இந்துக்களும், இந்து ஆலய தர்மகர்த்தா சபைகளும் தடை செய்ய வேண்டும். விடிய விடிய விளையாடுவதாலோ, ரி. வி. படக்காட்சி காண்பதாலோ நாம் சிவராத்திரி விழித்த பயனை அடைய முடியாது. பக்தியுடன் இருந்து விரதம் அனுட்டிப்பதையும், விழிப்பதுமே உண்மையான சிவராத்திரி விழிப்பாகும். தம்மையும் கடவுளையும் ஏமாற்றுவதை இந்துக்கள் நிறுத்த வேண்டும்.

கட்டாயமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஆலயங்களில் பிற்பகல் வேளைகளில் கூட்டு வழிபாடுகள், ஆன்மீகச் சொற்பொழிவுகள் நடைபெற வேண்டும். சகல இந்துக்களும் அதில் கலந்துகொள்ள வேண்டும். பிரத்தியேகக் கல்வி நிலையங்கள் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளில் இயங்காது ஆன்மீக வழிபாட்டுக்காக உதவ முன்வர வேண்டும்.

இந்து சமய அமைப்புக்கள் இந்து கலாசார பாரம்பரியங்களை வளர்க்க வேண்டும். அத்தோடு சமயத்துடன் சமூக சேவைகளையும் மேற்கொள்ள வேண்டும். சமூக சேவை என்ற ரீதியில் கோழி வளர்ப்புகளுக்குக் கடன் கொடுப்பது சமய அமைப்புகளுக்குப் பொருத்தமற்றது. காரணம் நாம் எக்காரணம் கொண்டும் உயிர்க் கொலைகளுக்கு உதவக் கூடாது. கோழி வளர்ப்புக்கு நிதி கொடுப்பதால் பல உயிர்களை அழிப்பதற்கு நாம் உதவுகின்றோம்.

எனவே இவைகள் நீக்கப்பட வேண்டும். இந்து சமய அமைப்புக்களின் மண்டபம் போன்ற கட்டடங்களில் பிற மதத்தவர்களின் மதமாற்றப் பிரசார நடவடிக்கைகளுக்குக் கொடுப்பதை இந்து அமைப்புக்கள் கட்டாயம் நிறுத்த வேண்டும்.

எங்கள் இந்து சமயம் உயர்ந்ததும் மேன்மையானதும் ஆகும். எனவே எங்களுக்கு மேலான சமயம் இந்து சமயமே. மறுபிறப்புக் கோட்பாடு போன்ற உயர்ந்த நிலையான விளக்கங்களை எங்கள் சமயம் வழங்குகிறது. இவ்வேளையில் நாம் எல்லாச் சமயமும் ஒன்று (சமம்) என்ற கோசத்தை எழுப்புகிறோம். இவ்வாறான இந்து சமய மேம்பாட்டுக்கு துரோகமான நடவடிக்கைகளை இந்துக்களோ, இந்து அமைப்புக்களோ மேற்கொள்ளப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். எம்மதமும் சம்மதம் என்ற போலிக் கொள்கை எங்களுக்குத் தேவையற்றது. எமக்கு இந்து மதமே மேலானது.

சுவாமி விபுலானந்தர் சைவ சமயத்தையும் தமிழையும் வளர்த்தார். ஆனால் இன்று சுவாமி விபுலானந்தர் சிலைகளை அமைக்கும் சிலர் அவரது நெற்றியில் விபூதி இடத்தவறுகின்றனர். காரணம், ''எம் மதமும் சம்மதம்'' என விபுலானந்தரைக் காட்ட முயற்சித்தமை ஆகும். எனவே விபுலானந்தர் சிலைக்கு நெற்றியில் விபூதி தரிக்கப்படல் வேண்டும். எமது மதம் இந்து மதம் எனக் கூறப்பட வேண்டும். ஆனால் ஏனைய சமயங்களை நாம் மதிக்க வேண்டும். அதற்காக அவர்களது வழிபாடுகளைப் பின்பற்றக் கூடாது.

இந்துக்களின் வீடுகளில் இந்துசமயக் கடவுள்களின் படம் மாத்திரமே வைத்து வழிபடல் வேண்டும். ஏனெனில் இந்நாட்டில் பௌத்த மதம் தவிர ஏனைய சமயங்கள் எங்களது இந்துச் சுவாமி படங்களைச் சாத்தான் எனக் கூறி மதிப்பதில்லை.

மேலும் பாடசாலைக்குச் செல்லும் இந்து மாணவர்கள் விபூதி தரித்து இந்து மதச் சின்னங்களுடன் செல்ல வேண்டும். இளமையிலிருந்தே இந்து சமய நடைமுறைகளைப் பெற்றோர் பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். அத்தோடு ஆலயங்கள், இந்து அமைப்புக்கள் அறநெறிப் பாடசாலைகளை எ நடாத்த வேண்டும். இவ் அறநெறிப் பாடசாலையில் இருந்து சமய அறநெறிகள் போதிக்கப்பட வேண்டும். இந்து சமய நூலகங்கள் உருவாக்கப்பட வேண்டும். கட்டாயமாக அறநெறிப் பாடசாலைகள், ஆலயங்கள் என்பவற்றுக்கும் இந்து சமய தமிழ் விழாக்களுக்கும் செல்லும்போது இந்துக்கள் ஆண்கள் வேட்டி சால்வை அணிந்தும் பெண்கள் நீண்ட உடைகளுடனும் செல்ல வேண்டும். இது எங்கள் இந்துக் கலாசாரமும் தமிழ்க் கலாசாரமும் ஆகும்.

இந்து என்றால் மாத்திரமே தமிழ் என்ற சொல் பொருந்தும். ஏனெனில் தமிழர்களின் சமயம் இந்து சமயமே அன்றி வேறில்லை. தமிழ் சமுதாயம் காக்கப்பட வேண்டுமாயின் இந்து கலாசாரப் பாரம்பரியங்கள் சிதைவுறாது வளர்க்கப்பட வேண்டும். இந்து சமயத்தை மேம்படுத்த உருவாகும் அமைப்புக்கள் பதவிகள் பட்டங்களுக்காகப் பணிபுரியாது எமது சமய மேன்மைக்காக சமய, சமூகப் பணிகளைப் புரிய வேண்டும். நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் சமூகப் பணியும், பத்து வீதம் சமயப் பணியும் புரிவது எங்கள் சமய மேன்மைக்குப் பெரிதும் உதவும் எனக் கூறமுடியாது. எனவே இந்து அமைப்புக்கள் இந்து சமயத்தை மேம்படுத்தும் நோக்குடன் செயற்படல் அவசியமாகும்.

இந்து இளைஞர்கள் இந்து சமயத்தையும், இந்து சமூகமான தமிழ் சமூகத்தின் கலாசார பாரம்பரியப் பண்பாடுகளையும் வளர்க்க முன்வர வேண்டும். ஏனெனில் இளைஞர்கள் நினைத்தால் உலகத்தையே இந்து சமய ஆன்மீகக் கூட்டமாக மாற்றலாம். சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார், அறிவாற்றல் பொருந்திய தூய்மைமிக்க ஒரு நூறு இளைஞர்கள் முன்வாருங்கள். ''இந்த உலகையே மாற்றி அமைக்கலாம்'' என்று. எனவே இந்து இளைஞர்களே எமது இந்து சமயத்தை மேன்மைப்படுத்த இந்து நூல்களை நன்கு கற்றுக் கொள்ளுங்கள். அதன் தத்துவங்களைப் புரிந்து கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் தனியாகவோ, குழுவாகவோ சென்று எடுத்துக் கூறுங்கள். எமது இந்து சமயத்தையும் எமது தமிழ் சமய கலாசார பாரம்பரிய தர்மங்களையும் வளர்க்க ஒன்றிணைந்து புறப்படுங்கள். இந்து சமய மேம்பாட்டுக்காக உங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்யுங்கள். உங்கள் பணி ஒரு பொதுநலமான, பயன் கருதாத, நற்பணியாக அமையட்டும். இது ஒவ்வொரு இந்து இளைஞனின் தலையாய கடனாகும். யாவரும் இந்துவாக வாழ்வோம். இந்து தர்மத்தைக் காப்போம்.

**சீ. யோகேஸ்வரன் ( ஜே. பி.)**
*தலைவர்,*
*மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை*
*(இளைஞர் சேவை அதிகாரி, குச்சவெளி – ஈச்சிலம்பற்று)*

# பசுவதை





பசுவைத் தெய்வமாக வழிபடுகிறோம். அதற்குப் பொங்கல் செய்கிறோம். பொட்டிட்டு மாலை போடுகிறோம். அதன் சாணியை விபூதியாக்கி சமயச் சின்னமாக அணிந்து கொள்கிறோம். எருத்து மாடுகளை வயல் உழவும் வண்டி இழுக்கவும் உபயோகப்படுத்துகிறோம்.

தாய்ப் பால் இல்லாத குழந்தைகளைப் பசு தாய்தானே பால் கொடுத்து வளர்க்கிறது. நோயாளிகளையும் முதியோர்களையும் கூடப் பால் கொடுத்துக் காப்பாற்றுகிறது. வெளிநாடுகளிலிருந்து இலட்சக்கணக்காக வந்து சேரும் பால் மாப் பெட்டிகளும் பசுக்களின் கொடைகளே.

பசு சாதுவான மிருகம் என்று எல்லோரும் சொல்லுவார்கள். கொம்பிருந்தாலும் அது மனிதரை இடிப்பதில்லை. மனிதன் கொம் பில்லாமலே மற்ற மனிதர்களை இடிக்கின்றான், கொலையும் செய்கின்றான். மனிதன் மிருகமாக மாறிவிட்டான். பசு சாதுவான பசுவாகவே இருக்கிறது.

பசுவும், கடினமாக உழைக்கும் எருதும், குதிரையும், யானையும், ஆடும், மானும் இன்னும் பல மிருகங்களும் தாவர உணவையே உண்கின்றன. பலமான வேலைகளைச் செய்கின்றன. மனிதன் பலத்துக்காக உண்பதாகப் பொய்யைச் சொல்லிக் கொண்டு நாக்கின் சுவைக்கு அடிமைப்பட்டு வாய்க்கு உருசிக்காக ஆடு மாடுகளையும் மாமிச உணவுகளையும் சாப்பிடுகிறான். புத்தி சாதுரியத்தினால் தான் உண்பது சரி எனவும் வாதிக்கிறான். இன்னும் மேலே போய் கடவுள் தன் பக்கம்தான் என்றும் சொல்லி தன்னையே ஏமாற்றுகிறான்.

மனிதத் தன்மை, மனிதப் பண்பு உள்ளவன் தான் மனிதன். மனிதன் எந்த உயிரையும் கொல்லமாட்டான். மற்றவர் மனம் நோக நடக்க மாட்டான். மாமிச உணவை உண்ணமாட்டான். கோயிலை வழிபட்டு விட்டு நேரே இறைச்சிக் கடைக்குப் போகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்காக இரக்கப்பட்டு இவர்களுக்கு நல்லறிவைக் கொடுக்கும்படி இறைவனைக் கேட்டுக்கொள்வோம்.

சைவ சமயத்தவர்கள் மாமிசம் புசிக்கக் கூடாது. சொந்த வீட்டில் எதையாவது செய்து பாவத்தைத் தேடிக்கொள்ளுங்கள். பொது விருந்துகளில் மாமிசத்தைச் சேர்த்துக் கொள்ளாதீர்கள். சைவ விருந்தாக நடத்துங்கள் என்று பல அன்பர்களிடம் பல சந்தர்ப்பங்களில் கேட்டுக்கொண்டேன். எவரும் இணங்கிய பாடில்லை. அதற்கேற்ற துணிவும் இல்லை. அதில்லாமல் என்ன விருந்து என்று கேட்டவர்களும் உண்டு.

அமெரிக்காவில் இருந்து இங்கு வந்து எங்களுக்குச் சைவ சமயத்தைப் பற்றியும் சைவ உணவைப் பற்றியும் போதித்து வரும் ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா அவர்கள் பசு வதையைப் பற்றி மிகவும் கண்டித்து வருகிறார். மக்கள் பார்வைக்காகப் பல இடங்களில் சுவர்களில் பசுக்களின் முறைப்பாடுகளையும் வேண்டுகோள் களையும் வர்ணப்படங்களாக வரைந்துள்ளார்கள் இச்சித்திரங்களைப் பார்க்கும் நாம் எமது சித்திரவதைகளை எண்ணி வெட்கமும் துக்கமும் அடைகிறோம்.

வேத நூல்கள், சமய நூல்கள், நீதி நூல்கள், புராண இதிகாசங்கள், எல்லாமே உயிர்க் கொலையையும் மாமிச உணவையும் கண்டித்துள்ளன. எல்லா ஜீவராசிகளும் கடவுளுடைய பிள்ளைகள். அவைகளிடம் அன்பு காட்ட வேண்டும்.

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைக்கூப்பி*
*எல்லா உயிரும் தொழும்.*

*தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூ*
*னுண்பானை எங்ஙனம் ஆளும் அருள்.*

*–திருக்குறள்*

*காப்பது விரதம் ( உயிர்வதை செய்யாமல் காப்பது நோன்பாகும் )*

*– ஆத்திச்சூடி*

*நோன்பு என்பது கொன்று தின்னாமை*
*(மற்ற உயிர்களைக் கொன்று அதன் புயாலை உண்ணாமல் இருப்பதே விரதம் ஆகும்.*

*– கொன்றை வேந்தன்*

*புலையும் கொலையும் களவுந் தவிர்*
*( புலால் உணவு, உயிர்க் கொலை, திருட்டுத் தொழில் இவற்றை ஒழித்து விடுவாயாக)*

*– கொன்றை வேந்தன்*

*கொல்லாமை எத்தனை குணக் கேட்டை நீக்கும். கொல்லா விரதங் குவலயமெல்லா மோங்க எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே.*

*எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணியிரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.*

*கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர் மற்றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.*

*கொலை களவு கட்காமங் கோபம் விட்டால் அன்றோ மலையிலக்கா நின்னருள் தான் வாய்கும் பராபரமே.*

*– தாயுமான சுவாமிகள்*

*கொலைபுரிவார் தவிர மற்றவரெல்லாம் நமது குலத்தவரே*

*– இராமலிங்க சுவாமிகள்*

*கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்.*

*–உலக நீதி*

*ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே*

*–ஆன்றோர் வாக்கு*

*பாவங்கள் ஆவன யாவை?*
*கொலை, களவு, கள் குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், வியபிசாரம், சூதாடுதல் முதலானவை. கொலை பஞ்சமா பாதங்களில் ஒன்றாகும்.*

*– ஆறுமுக நாவலர் பெருமான்*

பசு வதை, பகிடி வதை, சித்திரவதை, மனித வதை இப்படி எத்தனையோ வதைகள் உள. எல்லாம் மனித குலத்தால் செய்யப்படுபவை. காரணம் அறியாமை. இவற்றைத் தவிர்ப்பதாயின் அறியாமையில் புதையுண்ட பாமர மக்களிடையே அறிவையும், ஆத்மீகத்தையும், ஞானத்தையும், நீதியையும் புகட்ட வேண்டும். மகாத்மா காந்தியடிகள் மேல் நாடு சென்றபோது தாயார் மூன்று சத்தியங்களைக்கேட்டு வழியனுப்பி னார்கள். காந்தியடிகள் மூன்று சத்தியங்களையும் காத்து தாய்நாடு திரும்பி சேவைசெய்து மகாத்மா எனப் போற்றப்பட்டார்கள். மூன்று சத்தியங்களாவன மது அருந்த மாட்டேன், மாமிசம் புசிக்க மாட்டேன், பிற மாதரை விரும்ப மாட்டேன்.

பெற்றார்களும் ஆசிரியர்களும் பின் வருவன போன்ற சத்தியங்களை மாண வர்களிடம் பெற்றுக் கொள்ள வேண்டும் :

*மது அருந்த மாட்டோம்*
*மாமிசம் புசிக்க மாட்டோம்*
*பிற மாதரை விரும்ப மாட்டோம்*
*எந்த உயிரையும் கொல்ல மாட்டோம்*
*பசு வதை செய்யமாட்டோம்*
*பகிடி வதை செய்யமாட்டோம்*
*பொய் சொல்லமாட்டோம்*
*களவு எடுக்கமாட்டோம்*
*கோபம் கொள்ளமாட்டோம்*
*தெய்வத்தை இகழமாட்டோம்*
*தற்கொலை செய்யமாட்டோம்*

அம்மா என அலற ஆருயுரைக் கொன்றருந்தி இம்மானுட ரெல்லாம் இன்புற்றிருக்கின்றார். அம்மா எனுஞ் சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும் பொய் மாநிரயமெனில் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

சைவ உணவைப் பேணி சைவ சமயத்தைக் காப்போம்!

*இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!*
*ஆனந்தம்*

**பொ. கந்தையா,**
*காந்தி ஆசிரியர்*
*முத்துக்குமார சுவாமி கோயிலடி*
*திருக்கோணமலை*
*20.9.1998.*

# ஒரு நிமிடம் சிந்திப்போம்! ஒரு நிமிடம் சிந்திப்போம்!

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு ஏழை வீட்டிலும் குடி கொண்டிருக்கும் இன்றைய பிரதான பிரச்சினை வீட்டுத் தலைவனின் குடிப்பழக்கம். இது இன்று நேற்றல்ல, திட்டமிட்ட முறையில் அன்னிய ஆக்கிரமிப்பாளர்களால் நற்பழக்கம் பேணிவந்த எமது சமய கலாச்சாரப் பண்பாடுகளை மதித்து, அதன்படி வாழ்ந்து வந்த மக்களிடையே குள்ளத்தனமாகப் புகுத்தப்பட்ட பழக்கம்.

இப்பழக்கமானது ஏழைக் குடும்பங்களின் பொருளாதாரம், அந்தஸ்து, மரியாதை, குழந்தைகளின் கல்வி, அன்பு, அரவணைப்பு அனைத்தையும் இல்லாதொழிக்கிறது. குடும்ப ஒற்றுமையைக் குலைக்கிறது. வறுமையும் நிம்மதி இன்மையுமே வீட்டில் மிச்சமாக இருக்கிறது.

இறுதியில் உடலுழைப்பையே நம்பியிருக்கும் ஏழைக் குடும்பத் தலைவன் நோயாளியாகி தனக்கும் தன் குடும்பத்திற்கும் துன்பத்தையும் வேதனையையும் கொடுக்கிறான். ஒரு சிறு பொழுது சந்தோஷம் தந்து வாழ்வெல்லாம் எம்மை வேதனைக்குள்ளாக்கும் இப்பழக்கம் தேவைதானா? ஒரு நிமிடம் சிந்திப்போம்.

குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க ஆசைப்படும் சில அயோக்கியர்கள் வியர்வை சிந்தி உழைக்க விரும்பாத சோம்பேறிகள், கிராமந் தோறும் கசிப்பு எனும் மதுப் பிசாசினை உற்பத்தி செய்து மலிவு விலையில் விற்பனை செய்கிறார்கள். இது அபாயமானது. எத்தனை பேர் இதனால் அவலச் சாவுக்குள்ளாகி இருக்கிறார்கள்.

மதுப் பழக்கத்தால் கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்கள் சீரழிக்கப்படுகின்றன. மதுப் பழக்கம் குடும்ப நிம்மதியைக் குலைக்கிறது. மதுப் பழக்கத்தால் எமது கல்வி, எதிர்காலம் பாதிக்கப்படுகிறது.

பெற்றோரின் குடிப் பழக்கம் சமூக அந்தஸ்தையும் கௌரவத்தையும் குலைக்கிறது. மதுபானம் எமது பொருளாதாரத்தைச் சீரழிக்கிறது. மதுபானம் நோயின் அத்திவாரம்.

*திருக்கோணமலை மாவட்ட*
*காந்தி சேவை சங்கம்*

# நாமும் நமது மதமும்

*'சிவஞானச் செல்வர்"* செல்லப்பா சிவபாதசுந்தரம்
மதிப்பார்ந்த பொதுச் செயலாளர், திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை

வரலாற்றுப் புகழ் மிக்க பாரம்பரியத்தைக் கொண்டது எமது மதமான இந்து மதம். இதனைச் சனாதன தர்மம் என்று அழைப்பார்கள். இத்தகைய முன்னைப் பழமைக்கும் பழமையால் பின்னப் புதுமைக்கும் புதுமையினை விளக்கும் ஈடிணையில்லாத இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் நாம் என்று நாம் பெருமை பேசுகின்றோம். மார் தட்டுகின்றோம், ஆரவாரிக்கின்றோம். எனினும் நாம் எமது மதம் காட்டிய வழியில் செல்கின்றோம் என்பது தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய ஒன்றாக விளங்குகின்றது எனலாம். ஏனெனில் நாம் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நிலையில் இல்லாது எப்படியும் வாழலாம் என்ற எண்ணப் பாங்கில் வையத்தில் எமது வாழ்க்கையைக் கடைப் பிடித்து வருகின்றோம்.

வாழ்வாவது மாயம். இது மண்ணாவது திண்ணம் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு நெறி பிறழாது வாழ்ந்து வர வேண்டியது எமது தலையாய கடமையாகும். எமது மதப் பாரம்பரியப்படி எமது அருள்மிகு ஆலயங்கள் எமக்கு என்றும் உறுதுணையாகவும் ஆன்மீக ஈடேற்றத்துக்கு வழி காட்டுவனவாகவும் விளங்குகின்றன. எனவே ஆலயங்களின் தர்மகர்த்தாக்களும், அறங்காவலர்களும், பரிபாலன சபையிலுள்ளவர்களும் அன்பாகவும் பண்பாகவும் மக்களை மக்களாக மதித்து மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற தொண்டுள்ளம் உடையவர்களாக மிளிர வேண்டியது இன்றியமையாததாகும். இவ்வாறே "அந்தணர் என்போர் அறவோர்"என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க ஆலயங்களில் இறைவனுக்கு உள்ளன்போடு பூசை வழிபாடு முதலியவற்றை மேற்கொண்டு வருகின்ற அந்தணப் பெருமக்களும் படமாடும் கோயில் பரமனுக்குத் தொண்டு செய்வதைவிட நடமாடும் கோயில் மனிதனுக்குத் தொண்டு செய்வதே மேலானது என்ற நிலையில் மக்களோடு அன்னியோன்யமாகப் பழகி மக்களின் இன்ப துன்பங்களை விசாரித்து அவர்களுடைய ஆதங்களை உணர்ந்தவர்களாகச் செயற்படுவது வரவேற்கத் தக்கதாகும். ஆகவே மேற்கூறப்பட்ட விடயங்களை நாம் மனிதத் தன்மையுடனும் அருளாளர்களான நாயன்மார்கள் காட்டிய வழியிலும் சிந்தித்துச் செயற்பட்டால் எமது மதம் நவீன காலத்தில் ஏற்பட்டு வரும் சகல விதமான மாற்றங்களுக்கும் ஈடு கொடுத்து எமது மக்களை நல்வழிப்படுத்திச் செல்ல வாய்ப்பை ஏற்படுத்தக் கூடியவாறு பரிணமிக்கும் என்றால் அது தவறாகாது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்ற இந்துக்களாகிய நாம் எமது மதத்தின் பழம்பெருமையைமட்டும் பேசிக் கொண்டிராமல் எமது மதத்தின் வழி வழியாக வந்து கொண்டிருக்கின்ற சமயச் சிந்தனைகளை, கலாசாரத்தை மதித்து அதற்கேற்றபடியான கலாசாரத்துக்கேற்ற உடைகளுடன் ஆலயங்களிலும் ஆலய விழாக்களிலும் உற்சவங்களிலும் கலந்து கொள்வதோடு ஆறுமுகநாவலர் பெருமான் மிகவும் அருமையாகவும் பெருமையாகவும் கடைப்பிடித்து வந்த சைவ கலாசாரப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து பேணி வரத் திடசங்கர்ப்பம் கொண்டு எம் கடன் பணி செய்து கிடப்பதே என்ற நிலையில் எமது மதத்தின் எழுச்சிக்காக எம்மால் இயன்றதைச் செய்வோமாக.



# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
எதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது அங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.

## ஆலய பரிபாலன சபை

1. திரு. இ. முருகையா, *தலைவர்*
2. திரு. இ. மனோகரன், *செயலாளர்*
3. திரு. நா. கணபதிப்பிள்ளை, *பொருளாளர்*
4. திரு. வை. குமாரசாமி, *உப தலைவர்*
5. திரு. சி. ஜீவரெட்னம், *உப பொருளாளர்*
6. திரு. பூ. வரதராஜன்
7. திரு. க. சிவகணேஸ்வரன்
8. திரு. சீ. சிறிகாந்தன்
9. திரு. கு. கணபதிப்பிள்ளை
10. திரு. வா. அகிலன்
11. திரு. சீ. சீனி
12. திரு. க. நடராஜா
13. திருமதி வா. பாலாம்பிகை
14. செல்வன் க. கிட்னா

## கும்பாபிஷேக பிரதம குழு

1. திரு. த. பேரின்பநாதன்
2. திரு. ப. கந்தசாமி
3. திரு. செ. அருளானந்தம்
4. திரு. இ. இராஜேஸ்வரன்
5. திரு. பொன். இராமலிங்கம்
6. திரு. கு. இராமநாதன்
7. திரு. இ. இராகுலன்
8. திரு. க. சதீஸ்வரன்
9. திரு. சீ. தங்கவடிவேல்
10. திரு. க. விஸ்வநாதன்
11. திருமதி இ. வடிவாம்பிகை
12. செல்வன் செ. விமலேஸ்வரன்

## தொண்டர் சபை

1. செல்வன் க. வசந்த ரூபன்
2. செல்வன் வா. கபிலன்
3. செல்வன் து. தனராஜ்
4. செல்வன் ச. பிரசன்நாத்

இ. மனோகரன்
*செயலாளர்*

## ஆலய பரிபாலன சபை



## கும்பாபிஷேகக் குழு





ஞானவைரவர் ஆலயம்

# ஞானவைரவர் கோவில்

## அன்புவழிபுரம்

திருகோணமலையிலிருந்து அனுராதபுரத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலையில் பட்டினத்தில் இருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் அன்புவழிபுரம் என்ற குடியேற்றக் கிராமம் இருக்கின்றது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின் தோன்றிய சைவக் கிராமங்களில் இதுவும் ஒன்றாகும். 1956ஆம் 1957ஆம் ஆண்டுகளில் மக்கள் இங்கு குடியேறுவதற்கு காடுகளை வெட்டி குடியேறினார்கள். அப்பொழுது தென்னிந்தியாவில் இருந்து திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்த குன்றக்குடி ஆதீனக் குரு மகாசன்னிதானம் குன்றக்குடி அடிகளார் அவர்கள் அன்புவழிபுரத்திற்கு வருகை தந்து, இங்கு குடியேறிய மக்களை ஆசீர்வதித்து, அவர்களுக்கு வழிபாட்டுத் தலம் இல்லாததை உணர்ந்து இந்த ஞானவைரவர் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டி, வைரவர் சூலத்தையும் நாட்டி, ஞானவைரவர் என்ற பெயரும் சூட்டி இக் கிராமத்திற்கு அன்புவல்லிபுரம் என்ற பெயரும் சூட்டிச் சென்றார். அதன் பின்பு அவரால் ஸ்தாபிக்கப்பட்ட சூலத்தை மக்கள் கொட்டில் கட்டி வழிபட்டு வந்தார்கள். இக்கோயிலை கற்கோயிலாக அமைப்பதற்கு 1969ஆம் ஆண்டு தொடக்கம் திருப்பணி வேலைகளை சிறிது சிறிதாகச் செய்து வந்தார்கள். மக்களுடைய வசதியீனம் காரணமாக திருக்கோயில் அமைக்கும் வேலை தாமதப்பட்டுக்கொண்டு வந்தது. எனினும் அன்புவழிபுர மாதர் சங்கத்தின் விடாமுயற்சி காரணமாக இக் கோயிலின் திருப்பணி வேலைகளை 1980ஆம் ஆண்டு நிறைவேற்றி கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள். அதன் பின் மக்களுடைய ஆதரவால் ஞானவைரவர் ஆலயம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆலயத்தின் கிழக்கே ஒரு குளம் காணப்படுகின்றது. மேற்கிலும், வடக்கிலும் மலைகளால் சூழப்பட்ட இயற்கைச் சூழல் இவ் வாலயத்தின் நினைவை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றது.

மேலும் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிறுத்த மண்டபம், வசந்த மண்டபங்களைக் கொண்ட இவ்வாலயத்தின் கருவறையில் இரண்டரை அடி வைரவர் மூர்த்தியும் வசந்த மண்டபத்தில் இரண்டடி உயரமான உலோகத்தால் செய்யப்பட்ட வைரவர் மூர்த்தியும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வீதியில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆதிவைரவர் சூலத்திற்கு தனிப்பீடமும் நாகதம்பிரானுக்கு தனிப்பீடமும் அமைத்திருக்கின்றார்கள். நாள்தோறும் நித்திய பூஜையும் வெள்ளி செவ்வாய்க்கிழமைகளில் விசேட பூஜைகளும் நடைபெற்று வருகின்றன. கும்பாபிஷேக தினத்தை ஆரம்பமாகக் கொண்டு பத்து நாட்களுக்கு அலங்கார உற்சவமும் நடைபெறுகின்றது. நவராத்திரி திருவெம்பாவை முதலிய விஷேட காலங்களில் சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. வைகாசி பொங்கல்தினம் இங்கு மிகச்சிறப்பாக கொண்டாடுவது வழக்கம். பொங்கலை அடுத்து தீப்பாளம், தூக்குக்காவடி போன்ற மிக அற்புதமான தெய்வீகத் தன்மைகளும் இங்கு நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாகும். ஆலயத்தைப் பராமரிக்கும் பரிபாலன சபையில் பெண்களும் பங்குபற்றி தொண்டாற்றுவது போற்றத்தக்கதே. கோணேஸ் பெருமானுடைய நகர்வலம் நடைபெறும்போது இந்தக் கோவிலுக்கும் பெருமான் எழுந்தருளுவார். அப்போது இங்குள்ள மக்கள் இவ்வாலயத்தில் கோணேசப் பெருமானை பக்தியோடு வரவேற்று வழிபாடு செய்து பெரு விழாவாகக் கொண்டாடுவார்கள். வைரப் பெருமான் ஆண்டுக்கொரு முறை கிராம வலமும், அம்பாள் ஆண்டுக்கொரு முறை கிராம வலமும் வந்து மக்களுக்கு அருள் பாலிப்பது வழக்கம்.

ஞானவைரவர் ஆலயம்,
*அன்புவழிபுரம்.*

*தொகுப்பு : திரு. த. பேரின்பநாதன்.*



அன்புவழிபுரம் முத்துமாரி அம்மன்

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்

## அம்மன் கோவில் வீதி அன்புவழிபுரம்

1963ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9ம் திகதி நவராத்திரி தினத்திலே அம்பாள் தானாகவே தோன்றி காட்சி தந்தாள் என்றும் அதன் பின்பே நாகேந்திரம் செல்லப்பா என்பவர் இதனை ஸ்தாபித்தார் என்றும் கூறுவர். 1967ம் ஆண்டு சிறு கொட்டில் அமைத்து அதில் அம்மனின் முகத்தை வைத்து பிரதிட்டை செய்தோம். பின்னர் 1989ம் ஆண்டு கர்ப்பக்கிரக அமைப்புடன் கூடிய கோயிலைக் கட்டியெழுப்பி 1989ம் ஆண்டு ஆனி மாதம் வில்லூன்றிக் கந்தசாமி கோயில் சுந்தரக் குருக்களினாலும் காளிகோவில் இரவிச்சந்திரக் குருக்களினாலும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

மூலஸ்தானத்தில் வலப்பக்கத்தில் பிள்ளையாரும் இடப்பக்கத்தில் முருகப்பெருமானும் அமைந்துள்ளனர். வலப்புறமாக வீரபத்திரரும் முன்பாக வைரவர், நாகம்மாள், காத்தான் போன்ற தெய்வங்களையும் வைத்துப் பூசைகள் நடத்தப்படுகின்றன. ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும் மனையாவழி வல்லபை அம்பாளுக்கும் தொடர்புள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லப்பா கணபதிப்பிள்ளை ஆகிய நானும், எனது மனைவியும் இதனை மிகவும் பக்தி சிரத்தையுடன் பரிபாலித்து வருகின்றோம். நித்திய பூசை முத்து சற்குருநாதக் குருக்களால் நடத்தப்பட்டு வருகிறது. செவ்வாய்க்கிழமையும் வெள்ளிக்கிழமையும் விசேட பூசைகள் நடைபெறுகின்றது. மற்றும் வைகாசி விசாகப் பொங்கல், ஆனி உற்சவம் பத்து நாள், நவராத்திரி பூசை ஒன்பது நாள், திருவெம்பாவை பத்து நாள், சிவராத்திரி விழா போன்றன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

திரு. திருமதி கணபதிப்பிள்ளை அவர்களின் ஊக்கத்தினாலும் ஊர்மக்களின் பக்தியுடன் கூடிய ஒத்துழைப்பினாலும் இவ்வாலயம் தற்போது மிகவும் வளர்ச்சி அடைந்து வருகின்றது. பன்னிரண்டு அழகிய தூண்கள் கொண்டதும் வளைவான விதான அமைப்புடையதுமான முன் மண்டபம் செல்வராஜா புவனேஸ்வரி, சின்னராசா குடும்பத்தினர்களின் உதவியுடன் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. சிவகுரு நவரத்தினம் குடும்பத்தினரும் மற்றும் பல பக்தர்களின் உதவியுடனும் மடப்பள்ளி வேலைகளும் பூர்த்தியாகியுள்ளன.

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வளர்ச்சியில் அனைத்து அடியார்களும் பங்கு கொண்டு உதவ அம்பாளை வேண்டுகின்றோம்.

திரு. திருமதி கணபதிப்பிள்ளை

*தொகுப்பு : திரு. த. பேரின்பநாதன்.*

39955



அன்புவழிபுரம் பால முருகன் ஆலயம்

# அன்புவழிபுர சரவணபவ பால முருகன் ஆலயம்

தமிழ் மக்கள் மத்தியில் முருக வழிபாடானது பழங்காலந் தொட்டே நிலவி வருகின்றது. முருகனைக் குறிஞ்சி நிலக் கடவுளாகவே போற்றுவர். அன்புவழிபுரமாகிய இக்கிராமத்திலும் கலியுகவரதனாக முருகன் ''சரவணபவ'' என்ற சடாட்சர மந்திரத்தை முன்னாகக் கொண்டு பாலமுருகனாக எழுந்தருளியிருந்து அருள்பாலித்து வருகின்றார். ஆரம்பத்தில் கற்கள் நிறைந்த மேட்டு நிலத்தில் அருவநிலையில் இருந்தே அருள்பாலித்தார். ஓலைக்கொட்டில் ஒன்றில் வேல் வைத்து வழிபாடும் பூசையும் நடத்தினர்.

இவ்வாலயம் 30 ஆண்டு காலப் பழமை வாய்ந்ததாகும். கொட்டிலில் குடியிருந்த பால முருகனின் அருட்கடாட்சத்தால் 1992ம் ஆண்டில் பரிபாலன சபை ஒன்று உருவாக்கப்பட்டது. 1994ஆம் ஆண்டில் அமெரிக்க இந்து மதத் துறவி ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா அவர்களால் தூபி கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மகாமண்டபத்தின் அத்திவாரச் செலவு, சிற்பாசாரியாரின் கொடுப்பனவுச் செலவுகள் என்பனவற்றை ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா ஏற்றுக்கொண்டார். இவ்வாலயத்தைக் கட்டி முடித்துக் குடமுழுக்குச் செய்ய வேண்டும் என்பதில் ஆலய பரிபாலன சபையினர் மிகவும் அக்கறையோடு உழைத்தனர்.

ஆலயத்தின் பிரதம குரு பிரம்ம ஸ்ரீ சிவகுகராஜக் குருக்கள் இவ்வாலயத்தின் பூசகராக வந்து வாய்த்தமை மிக்கதொரு அருட்கடாட்சமாகும். வேலைகளை எவ்வாறு இலகுவாக முடிப்பதென ஆலோசனை கூறியதோடு ஊக்குவிப்பும் அளித்தார்.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் பிரதிஸ்டை செய்வதற்கு வேண்டிய விக்கிரகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நிதி போதாதிருந்தது. இந்நிலையில் இக்கிராமத்தில் வசிக்கும் திரு. க. தங்கராசா பாலமுருகனின் விக்கிரகத்தையும் திரு. பாண்டியன் விநாயகர் விக்கிரகத்தையும் பெற்றுத் தந்து காரியங்களைச் சிறப்பாகச் செய்ய உதவியமையும் பாலமுருகனின் அருளினாலேதான். இத்துடன் ஆலயப் பிரதம குருக்கள் அவர்களின் இடைவிடாத முயற்சியும் வழிகாட்டலும் கும்பாபிஷேகத்தைக் குறித்தபடி நடத்த உதவியது எனின் மிகையாகாது.

பல்வேறு இன்னல்களையும் அனுபவித்து வரும் இக்கலிகால மக்கள் முருகப்பெருமானின் திருவருளையும் திருவிளையாடல்களையும் நன்கு அறிவார்கள் . காலாகாலமாக அனுபவித்து வரும் கஸ்டம் நீங்கி சாந்தியும் சமாதானமும் விரைவில் கிட்டும் என நம்புகிறார்கள் எதிர்பார்க்கிறார்கள். ''வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும் நெஞ்சில் ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்'' என்றார் நக்கீரர்.

*அன்னலவன் பணி செய்து*
*அவனருள் பெற்றுயர்க*

*தொகுப்பு:* திரு. த. பேரின்பநாதன்.

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
## காந்திநகர்



காந்திநகர் முத்துமாரி அம்மன் ஆலயம்

காந்திநகர் என்று தற்போது அழைக்கப்பட்டு வரும் இப்பகுதி 1948 ஆம் ஆண்டு காலப் பகுதியில் "இத்தாலியன் கேம்ப்" என்ற பெயருடன் அம்மைநோய் தடுப்புக்கான கொட்டில்கள் அமைக்கப்பட்ட பகுதியாகக் காணப்பட்டது. அக்காலத்தில் சுகாதாரப் பரிசோதகராக விளங்கிய திரு. சிற்றம்பலம் அவர்களின் தலைமையில் மக்கள் இங்கு குடியேற்றப்பட்டனர். அக்காலத்தில் இது ஒரு காடடர்ந்த பகுதியாகவே காணப்பட்டது. இங்கு குடியமர்த்தப்பட்ட மக்களின் வழிபாட்டுத் தேவைக்காகத் தகரக் கொட்டகை அமைப்பிலான முருகனாலயம் ஒன்றைச் சுகாதாரப் பரிசோதகர் சிற்றம்பலம் அவர்களின் அனுசரணையுடன் அமைத்தனர். அப்பொழுது "மங்களம் பூச்சி" என்பவர் பூசகராக இருந்து பணியாற்றினார். 1955ஆம் ஆண்டு இவர் காலஞ்சென்றதன் பின் "சின்னச்சாமியார்" என்பவர் பூசகராகக் கடமை புரிந்தார். இக்காலத்தில் முருகனாலயத்தில் முத்துமாரியம்மனையும் வைத்து வழிபடத் தொடங்கினர்.

1957ஆம் ஆண்டு சின்னச்சாமியார் கன்னியாய் சென்று விட்டதால் "சடைச்சாமியார்" பூசை வேலைகளைச் செய்து வந்தார். இவர் காலத்தில் ஆலயம் சிறந்த முறையில் சக்தி பெற்றிருந்ததோடு நகரப் பகுதியிலிருந்தும் பக்தர்கள் வருகைதந்து அம்மன் அருள் பெற்று தங்குறை தீர்த்தனர். நவராத்திரி காலத்தில் அம்பாள் சூரகத்துடன் வீதியுலா வரும்போது திருகோணமலை நகர வீதிகளுக்கும் உலாச்சென்று அங்கு வாழும் மக்களுக்கும் அருள் பாலித்து வருவது வழக்கமாகும்.

உகாலப் பகுதியில் பெரியோர்கள் பலரின் ஆதரவுடன் ஆலயபரிபாலன சபை ஒன்று பெருமாள் குப்பையாண்டி என்பவர் தலைமையில் அமைக்கப்பட்டது. பூசகர் ஆகிய சடைச்சாமியார் வயதானதால் நகராட்சி மன்றத் தொழிலாளரான கருப்பன் நாகன் என்பவர் பூசைப்பொறுப்பை ஏற்றுச் செயற்பட்டு வந்தார்.

1968ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய இளைஞரிடம் ஆலய பரிபாலன சபை நிர்வாகம் கைமாறியது. இச்சபையில் கூ. பாக்கியம் தலைவராகவும், கு. கதிரவேல் செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றி வந்தனர். பரிபாலன சபையின் செயலாளர் கு. கதிரவேல் அவர்களின் பரிந்துரையின் பேரில் பரிபாலன சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் மூலஸ்தானத்தைக் கொண்ட அம்பன் ஆலயத்தை அமைக்கத் தீர்மானம் எடுத்து நிறைவேற்றப்பட்டு அம்பாளின் வாக்குக் கேட்டு பொது மக்களின் ஆதரவுடன் இளைஞர்களின் விடாமுயற்சியாலும் ஆலய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆலயத்திற்கு அம்பாள் விக்கிரகம், திருகோணமலை இந்து இளைஞர் பேரவையின் செயலாளராக வியங்கிய திரு. சிவபாதசுந்தரம் அவர்களின் முயற்சியால் யாழ் மில்க் வைட் சோப் (MILK WHITE SOAP) உரிமையாளர் காலஞ்சென்ற திரு. கனகராசா அவர்களால் கையளிக்கப்பட்டது. 1990இல் ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவாவின் உதவியுடன் கும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டில் வன்செயலால் ஆலயத்திற்குச் சிறு சேதம் ஏற்பட்டாலும் மக்களின் விடாமுயற்சியால் திருத்த வேலைகள் செய்யப்பட்டு அன்புவழிபுர "ஞான வைரவர் ஆலய விஸ்வம் ஐயா" அவர்களால் பூசைகள் ஒழுங்காக நடத்தப்பட்டன. 1997இன் பின் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கு. கதிரவேல் அவர்கள் பூசகராகக் கடமையாற்றுகின்றார்கள்

அம்பாள் அனுக்கிரகத்தால் ஆலய எல்லைக்குள் நாகம்மாள், பேச்சியம்மன், வீரபத்திரர், காத்தான், வைரவர் ஆகிய தெய்வங்களுடன் அம்பாள் வீற்றிருந்து அருள் பாலித்து வருகின்றார்.

*ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயம்*
*காந்திநகர்*

*தொகுப்பு :* திரு. த. பேரின்பநாதன்

ௐ



# விநாயகப் பெருமானின் திருநாமங்கள் அர்ச்சனை நாமாவளியில் காரணப் பெயர்

| | | |
|---|---|---|
| கஜாநநன் | - | யானை முகத்தையுடையவர் |
| ஸித்திப்ரதன் | - | எடுத்த கருமத்தைவீரர் |
| பாலகப்பிரியன் | - | பிள்ளைகளுக்கு அன்பர் |
| வித்தியராஜன் | - | கல்விக்கு அரசர் |
| மோதகபக்ஷகன் | - | கொழுக்கட்டையுண்பவர் |
| விநாயகன் | - | தலைமை வகிப்பவர் |
| வீரகணபதி | - | வீரர்களுக்குத் தலைவன் |
| லம்போதரன் | - | தொந்தி வயிறுடையவர் |



ஐந்து கரத்தோனே அம்பிகை பாலனே
நம்பினோர்கருள்புரியும் ஞான விநாயகனே

அன்புவழிபுரத்தில் அருட்கோலம் கொண்ட
எங்கள் தில்லையம்பலப் பிள்ளையார் - அவர்
திருக்கோலம் காண வரும் பக்தர்கள் துயர்
தீர்க்கும் சக்தியின் பிள்ளையார் சிவசக்தியின் பிள்ளையார்

கள்ளம் பத்தைக் காட்டுக்குள்ளே
கஜமு கக்கோலம் கொண்டு காவல் நின்ற கணபதியே
இந்த கள்ளமற்ற மக்கள் துயர் தீர்க்க வென
கோவில் கொண்ட கருணைப் பெரு நிதியே

வல்ல வினை தீர வென வலம் வந்து பக்தரெல்லாம்
வாழ்த்தி நிற்கும் அருள்நிதியே
நல்ல உள்ளம் கொண்ட மக்கள் உந்தன் புகழ்
பாடி நிற்கும் பெருமைத் திருத்தளமே

புத்தாயிரம் ஆண்டு ஆவணி பதினாறாம் நாளில்
கும்பாபிஷேகம் கொண்ட கணநாதா - அதைக்
கொண்டாடுவோர் குலம் நன்றாக வாழ்ந்திட
நல்லருள் புரிந்திடும் குணசீலா

இராஜேஸ்வரன் - இராஜதயாளினி
*நுண்கலைப் பீடம்,*
*யாழ் பல்கலைக் கழகம்,*
*யாழ்ப்பாணம்.*

## பின்வரும் அன்பர்கள் நிதி உதவி செய்ததோடு மட்டுமன்றி சில திருப்பணி வேலைகளையும் பூர்த்தி செய்துள்ளனர்

| | | |
|---|---|---|
| 01. மண்டபம் | – | திரு. சிவஞானம் ஜீவரெட்ணம் |
| 02. மணிகோபுரம் | – | திருமதி சீனித்தம்பி செல்லம் |
| 03. பின் தூபி | – | திரு. வை. குமாரசாமி |
| 04. ஐயர் விடுதி | – | திருகோணமலை மாவட்ட முன்னேற்றச் சங்கம் |
| 05. எழுந்தருளி தூபி | – | திரு. தேவராசா |
| 06. கிணறு | – | திரு. த. செல்வச்சந்திரன் |
| 07. எழுந்தருளிச் சிலை | – | திரு. சி. பத்மநாதன்<br>திரு. பே. பத்மநாதன்<br>திரு. ப. கந்தசாமி |
| 08. எலி வாகனம் | – | திரு. கு. இராமநாதன் J.P. |
| 09. மின் இணைப்பு | – | திரு. க. சிவனேஸ்வரன்<br>திரு. ம. ஆனந்தம் |
| 10. திருப்பணிவேலைகளுக்கு | – | காலஞ்சென்ற திரு. அ. தங்கத்துரை (பா. உ.)<br>பணம் ரூபா 50,000/= |

# கூப்புகின்றேன், கைகூப்பி நன்றி சொல்கின்றேன் உங்களுக்கு...

01. திருப்பணி வேலைகளைக் கண்காணித்த குடமுழுக்கு நாயர்களான திரு. சி. ஜீவரெட்ணம், திரு. பூ. வரதராஜன் அவர்களுக்கும்.

02. திருப்பணி வேலைகளுக்கு உதவி அளித்த இந்து சமய அபிவிருத்திச் சபை மற்றும் சுவாமிஜி தந்திரதேவா மகராஜின் ஆசிகள் ஆலோசனைகள் நல்கியதற்கு.

03. கும்பாபிஷேக பிரதம குரு வேதாகமமாமணி சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் ஆதீனகர்த்தா அவர்களுக்கும்.

04. நன்முகத்தோடு இன்முகம் காட்டி பொருள், சரீர உதவிகள் அளித்த பொதுமக்கள் அனைவருக்கும்

05. உதவி என்றபோது பாரிபோல் வாரி வழங்கிய சமய முன்னோடிகள், வணிக நெஞ்சங்களுக்கும்.

06. பிள்ளையாரின் கைங்கரியத்தில் சிரமதான அடிப்படையில் கோயில் நிர்மாணத்திலிருந்து கும்பாபிஷேகம்வரை ஒத்துழைத்த சகலருக்கும்.

07. பின்வரும் திருப்பணிகளைச் செய்த அன்பர்களுக்கும்

| | |
|---|---|
| மண்டபம் | திரு. சிவஞானம் ஜீவரெட்ணம் |
| மணிகோபுரம் | திருமதி சீனித்தம்பி செல்லம் |
| பின்தூபி | திரு. வை. குமாரசாமி |
| ஐயர் விடுதி | திருகோணமலை மாவட்ட முன்னேற்றச் சங்கம் |
| எழுந்தருளி தூபி | திரு. தேவதாஸ் |
| கிணறு | திரு. த. செல்வச்சந்திரன் |
| எழுந்தருளி சிலை | திரு. சி. பத்மநாதன், திரு. பே. பத்மநாதன், திரு. ப. கந்தசாமி |
| எலி வாகனம் | திரு. கு. இராமநாதன் J.P |
| பின் இணைப்பு | திரு. க. சிவனேஸ்வரன், திரு. ம. ஆனந்தம். |

08. ஆலய அர்ச்சகராய் இருந்து திருப்பணி வேலைகளில் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்த சைவசித்தாந்த மணி செ. அருளானந்தம் அர்ச்சகர் அவர்களுக்கும்.

09. சிற்பாச்சாரியார்கள், கட்டடக் கலைஞர்கள், ஓவியர்கள் அனைவருக்கும்.

10. கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட ஏனைய குருக்கள் அனைவருக்கும்

*எங்கும் எம்முடன் கலந்து எம்மோடு எம்மாய் சகல வேலைகளிலும் ஒத்துழைத்த ஏனையோருக்கும் கைகூப்புகின்றேன். கூப்பி நன்றி சொல்கின்றேன் அனைவருக்கும்.*

இ. மனோகரன்
*செயலாளர்*
*ஆலய பரிபாலன சபை*

# நாம சங்கீர்த்தனம்

(1) அசத் தோமா ஸத்கமய
தமஸோமா ஜோதிர்கமய
மிருத்தியோர்மா அமிர்தம்கமய
ஓம் சாந்தி சாந்தி சாந்தி :

(2) குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணுர்
குருர் தேவோ மஹேச்வர :
குரு ஸாக்ஷாத் பரம்பிரஹ்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ

(3) ஓம் பூர்வஸ்ஸுவ :
தத் ஸவிதுர்வரேண்யம்
பாகோதேவஸ்ய தீமஹி
தியோ யோ ந : ப்ரசோதயாத்

(4) நமோ பிரமன்ய தேவாய
கோ பிராமண ஹிதாய ச
ஜகத் ஹிதாய கிருஷ்ணாய
கோவிந்தாய நமோ நமஹ

(5) ஓம் தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய
தீமஹி தந்தோ தந்தி ப்ரசோதயாத்

(6) ஓம் தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய
தீமஹி தந்நோ ருத்ரா பிரசோதயாத்

(7) ஓம் கார்த்திகேயாய வித்மஹே மகாசேனாய
தீமஹி தன்னஹ சண்முகா ப்ரசோதயாத்

(8) ஓம் காத்யாணாய வித்மஹே கன்யாகுமாரி
தீமஹி தந்நோ துர்க்கி பிரசோதயாத்

(9) ஓம் நாராயணாய வித்மஹே வாசுதேவாய
தீமஹி தந்நோ விஷ்ணு பிரசோதயாத்

(10) பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆற்றங்கரை மீதிலே அரசரமர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
சஞ்சலங்கள் தீர்ப்பவர் சகல வினை போக்குபவர்
தஞ்சம் என்று வந்தவர்க்கு மிஞ்சி சுகம் அளிப்பவர்
யானை முகங் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர்
அவல் கடலை சுண்டலும் அரிசி கொழுக்கட்டையும்
ஆவலுடன் தின்னுவார் அல்லல் தீர்க்கும் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
சிவாய நம ஓம் சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் நம சிவாய ஓம் நமசிவாய
என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கி வைக்கும் பிள்ளையார்
கலியுகத்தில் எம்மைக் காவல் காக்கும் பிள்ளையார்
எலியின் மீது ஏறியே வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
ஔவைக்கு அருள்புரிந்த ஆனைமுகப் பிள்ளையார்
கௌவைக்கனி மாம்பழத்தை மகிழ்ந்தெடுத்த பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

(11) அங்கமும் வேதமும் ஓது நால்வர்
அந்தணர் நாளு மடி பரவ
மங்குன் மதிதவள் மாட வீதி
மருகனிலாவிய மைந்த சொல்லாய்
செங்கையலாற் புனல் செல்வ மல்கும்
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடும்
கணபதீச்சரங் காமுறவே

(12) பிடியதனுருவுமை கௌமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே

(13) மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயன் திருநீறே

(14) கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதலவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைக்கடல் சூழ்ந்து
கொள்ள முன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய் தோன்றுங்
கோணமா மலையமர்ந்தாரே.

(15) சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

(16) ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதிதேவா
ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதிதேவா
ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதிதேவா
ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதிதேவா
ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதிதேவா
மாதா பார்வதி பிதமகா தேவா (2)

ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதிதேவா (2)
கஜானனா கஜானனா
கஜானனா ஹே கணபதிதேவா

(17) ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச பாஹிமாம் (2)
ஜெய கணேச ஜெய கணேச ஜெய கணேச ரட்சமாம்
ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச பாஹிமாம்
கஜமுக கஜமுக கணநாதா
கௌரி புத்திரா கணநாதா
ஓம் கணேச ஓம் கணேச ஓம் கணேச பாஹிமாம்
சரணம் சரணம் கணநாதா

(18) ஜெய கணேச ஜெய கணேச ஜெய கணேச தேவா
ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச தேவா
பக்த உதாரண பக்தஜன போஷண
பார்வதி நந்தனா பக்த சம்ரக்ஷண
ஓங்காரா பிரணவ ஸ்ரீ ரூபா
பார்வதி நந்தன ஹே சிவநந்தனா

(19) ஓம் சிவாய ஓம் சிவாய ஓம் சிவாய நம ஓம்
ஓம் சிவாய ஓம் சிவாய ஓம் சிவாய நம ஓம்
ஓம் சிவாய ஓம் சிவாய ஓம் சிவாய நம ஓம்
ஓம் சிவாய ஓம் சிவாய ஓம் சிவாய நம ஓம்
சம்போ சங்காரா ஓம் சிவாய ஓம் சிவாய நம ஓம்
சம்போ சங்காரா ஓம் சிவாய ஓம் சிவாய நம ஓம்
சம்போ சங்காரா ஓம் சிவாய ஓம் சிவாய நம ஓம்
சம்போ சங்காரா ஓம் சிவாய ஓம் சிவாய நம ஓம்

சங்கரா சதாசிவா ஓம் சிவாய நம ஓம்
சங்கரா சதாசிவா ஓம் சிவாய நம ஓம்
சங்கரா சதாசிவா ஓம் சிவாய நம ஓம்
சங்கரா சதாசிவா ஓம் சிவாய நம ஓம்

(20) சொல்வோம் சொல்வோம் சேர்ந்து சொல்வோம்
ஓம் நம சிவாய
ஓம் நம சிவாய ஓம் நம சிவாய
சொல்வோம் சொல்வோம் சேர்ந்து சொல்வோம்
ஓம் நம சிவாய
சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம்
ஹர ஹர ஹர ஹர ஓம் நம சிவாய
சொல்வோம் சொல்வோம் சேர்ந்து சொல்வோம்
ஓம் நம சிவாய
ஓம் நம சிவாய ஓம் நம சிவாய
சொல்வோம் சொல்வோம் சேர்ந்து சொல்வோம்
ஓம் நம சிவாய
சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சொல்வோம் சொல்வோம் சேர்ந்து சொல்வோம்
ஓம் நம சிவாய
ஓம் நம சிவாய ஓம் நம சிவாய

(21) ஹர ஹர சிவ சிவ அம்பல வாணா
அம்பல வாணா பொன்னம்பலவாணா
அர ஹர சிவசிவ அம்பல வாணா

ஆனந்த தாண்டவ நடராஜா
நடராஜா நடராஜா
நர்த்தன சுந்தர நடராஜா
சிவராஜா சிவராஜா
சிவகாமி ப்ரிய சிவராஜா
சிதம்பரேசா நடராஜா

(22) சம்பு குமாரா அரோகரா
சிவசங்கரி பாலா அரோகரா
சிவ சிவ சிவ சிவ ஹர ஹர ஹர ஹர
சிவசரவணபவ அரோகரா
சம்பு குமாரா அரோகரா
சிவசங்கரி பாலா அரோகரா
கந்தா குமரா வடிவேலா
சிவசங்கரி புத்திரா அரோகரா

(23) சரவணா சிவகுமாரா (2)
சண்முக நாதா ஜெய் ஜெய் சண்முகநாதா (2)
சுப்ரமண்யா கார்த்திகேயா கதிர்வேலா (2)
சண்முக நாதா ஜெய் ஜெய் சண்முகநாதா (2)
சரணம் சரணம் சண்முகநாதா(2)

(24) கந்தா குமரா வடிவேலா
கருணா கரனே சிவபாலா
வருவாய் அருள்வாய் அழகா முருகா
மாயோன் மருகா மயில் வாகனனே
முருகா முருகா முருகா முருகா
வருவாய் முருகா முருகா
அருள்வாய் முருகா முருகா

(25) பழனி முருகா வேல்முருகா (2)
சரணம் சரணம் வேல்முருகா (2)
கணபதி சோதர வேல் முருகா (2)
கார்த்தி கேயா வேல்முருகா (2)
சுப்ரமணியா வேல் முருகா
அர ஹரோகரா சுவாமி அர ஹரோகரா (2)
அரோஹரா அரோஹரா – அர ஹரோகரா (2)

(26) சுப்பிரமண்யம் சுப்பிரமண்யம்
சண்முகநாதா சுப்பிரமண்யம்
சுப்பிரமண்யம் சுப்பிரமண்யம்
சண்முக நாதா சுப்பிரமண்யம்
சிவ சிவ சிவ சிவ சுப்பிரமண்யம்
அர ஹர அர ஹர சுப்பிரமண்யம்
சிவ சரவணபவ சுப்பிரமண்யம்
குரு சரவணபவ சுப்பிரமண்யம்

(27) அன்பருக்கு அன்பனே நீ வாவா முருகா
ஆறுபடை வீடுடையாய் வாவா முருகா
இன்பமய ஜோதியே நீ வாவா முருகா
ஈசனுமை பாலகனே வாவா முருகா
உலக நாத மருகனே நீ வாவா முருகா
ஊமைக் கருள் புரிந்தவனே வாவா முருகா
எட்டுக்குடி வேலவா நீ வாவா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வாவா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வாவா முருகா
ஒய்யாரி வள்ளி லோலா வாவா முருகா
ஓங்காரத் தத்துவனே நீ வாவா முருகா
ஔவைக்கு உபதேசித்தவனே வாவா முருகா
ஓடிவா நீ ஆடிவா நீ வா வா முருகா
ஆடிவா நீ ஓடிவா நீ வா வா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ வா வா முருகா
ஓடிவா நீ ஓடிவா நீ வா வா முருகா

(28) ஜெய் ஜெய் பவானி மா அம்பே பவானி மா
ஜெய் ஜெய் பவானி மா அம்பே பவானி மா
அம்பே பவானிமா தேவி பவானி மா
அம்பே பவானிமா தேவி பவானி மா
ஜெய் ஜெய் பவானி மா அம்பே பவானி மா
ஜெய் ஜெய் பவானி மா அம்பே பவானி மா
அம்பே பவானிமா தேவி பவானி மா
அம்பே பவானிமா தேவி பவானி மா

(29) துர்க்கே துர்க்கே
துர்க்கே ஜெய ஜெயமா (2)
துர்க்கே துர்க்கே
துர்க்கே ஜெய ஜெயமா (2)
காளி கபாலினிமா (2) துர்க்க பவானிமா (2)
ஜெக தோதாரினிமா (2)
ஜெய ஜெய காளிமா ஜெய ஜெய துர்க்கேமா
ஜெய ஜெய காளிமா ஜெய ஜெய துர்க்கேமா

(30) ஜெய் ஜெய் துர்க்கை ஜெய் பவானி
சாம்பவி சங்கரி ஜெய் பவானி
ஜெய ஜெகதம்பே ஜெய மாங்கல்யே
சாம்பவி சங்கரி ஜெய் பவானி
ஜெய ஜெய ஜனனி மகா காளியே
சாம்பவி சங்கரி ஜெய் பவானி

(31) ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்

சுந்தரவதனி சுகுண மனோஹரி
மந்த ஹாச முக மதிவதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே (ஓம்)

நந்திதேவருடன் முனிவரும் பணிய
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே (ஓம்)

தங்கச் சிலம்பு சலசல வென்றிட
தாண்டவமாடித்தனயன் மகிழ்ந்திட
பொங்குமானந்தமுடன் புவி மேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜராஜேஸ்வரி சரணம் சரணம்

(32) கோபால ராதே கிருஷ்ணா
கோவிந்த கோவிந்த கோபால்
கோபால் கோபால் கோபால்
கோபால ராதே கிருஷ்ணா கோவிந்த
கோவிந்த கோபால்
கோவிந்த கோவிந்த கோபால்
ராதே கிருஷ்ணா
கோவிந்த கோவிந்த கோபால்
ராதே கோவிந்த கோவிந்த கோபால்
ராதே கோவிந்த கோவிந்த கோபால்

(33) ராம கிருஷ்ணா வாசுதேவ நாராயணா ஹரி ஹரி (2)
நாராயணா ஹரிஹரி ஓம் நாராயணா ஹரி ஹரி (2)
விஸ்வரூப வாசுதேவ நாராயணா ஹரி ஹரி
ஓம் நாராயண ஹரி ஹரி ஓம் நாராயண ஹரி ஹரி
விஸ்வரூப வாசுதேவ நாராயணா ஹரி ஹரி
நாராயணா ஹரி ஹரி ஓம் நாராயணா ஹரி ஹரி

(34) விட்டல்லா ஹரி விட்டல்லா
விட்டல்லா ஹரி விட்டல்லா
விட்டல்லா ஹரி விட்டல்லா
பாண்டுரங்க விட்டல்லே ஹரி நாராயணா
புரந்தர விட்டல்லே ஹரி நாராயண
ஹரி நாராயண பஜோ நாராயண

(35) நாராயணா நாராயணா நரஹரிரூபா நாராயணா
நாராயணா நாராயணா நரஹரிரூபா நாராயணா
நாராயணா நாராயணா நரஹரிரூபா நாராயணா
கோபாலனா கோபாலனா கோகுலநந்தன் கோபாலனா
கோபாலனா கோபாலனா கோகுலநந்தன் கோபாலனா
கோபாலனா கோபாலனா கோகுலநந்தன கோபாலனா
கேஷவா மாதவா நாராயணா நந்தகோபாலனா
கேஷவா மாதவா நாராயணா நந்தகோபாலனா
கேஷவா மாதவா நாராயணா நந்தகோபாலனா

(36) ராமா ராமா ரமரகு வீரா
ராமச்சந்திரா ரண தீரா
ராமா ராமா ரமரகு வீரா
ராமச்சந்திர பரந்தாமா
ஹரே ராம ராம ரகுநாதா ஹரே
ராமச்சந்திரன் ஜெகநாதா
ஹரே ராம ராம ஜெய சீதா ஹரே
ராமச்சந்திரன் ஜெயராமா

(37) ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணா ஓம் நமோ நாராயணா
(ஓம்)

பிறவிதோறும் வினைமிகுந்து பெருகுகின்ற இருளினை
அகல வைக்கும் அருணதீபம் ஓம் நமோ நாராயணாய

ஊறுதுன்பம் உடல் வியாதி ஊடழ்விடாத வறுமையும்
ஆறவைக்கும் அருள்மருந்து ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

ஏக்கமாங் குழிக்குள்ளே இருண்டுருண்ட வேளையில்
தூக்கிடும் துணைக்கரங்கள் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

சோகமோஹ தாகமீறிச் சோர்வு விஞ்சும் வேளையில்
கருணையான புனிதகங்கை ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

ஜனனமரண பயதரங்க ஸாகரம் கடத்தியே
உடனுவந்து காக்கும் ஓடம் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

கடுகடுத்து முனைதொடுத்து காலசூலம் சீறுநாள்
உயிர்தடுத்த கவசமாகும் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
உலகெலாம் முழங்க வேண்டும் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

(38) ஓம் ஓம் ஓம் நாராயணாய
ஓம் ஓம் ஓம் ஓம் நாராயணா
நாராயணா ஹரி நாராயணா ஹரி
நாராயணஹரி நாராயணா (2)
ஓம் ஓம் ஓம் ஓம் நாராயணாய
ஓம் ஓம் ஓம் ஓம் நாராயணா

(39) ஜெய ஜெய கிருஷ்ணா வா எங்கள் கோபிய கண்ணாவா
கண்ணா ஓடிவா கிருஷ்ணா எம்மைப்பார் (2)
ஜெய ஜெய கிருஷ்ணா வா எங்கள் கோபிய கண்ணாவா (2)
நாதவடிவானவன் எங்கள் நம்பிக்கை பொருளானவன் (2)
கண்ணா ஓடிவா கிருஷ்ணா எம்மைப்பார் (2)
நாதவடிவானவன் எங்கள் நம்பிக்கை
பொருளானவன் ஆதி முதலானவன் எம்மை
ஆளும் கருணாகரன் (2)

(40) கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார் மேக வண்ணனாம்
வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்

குழலி னாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்
கூட்டமாகக் கோபியர்
கூட ஆடும் கண்ணனாம்

மழைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனாம்
நச்சுப் பாம்பு மீதிலே
நடன மாடும் கண்ணனாம்

கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனாம்
தூது சென்ற பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனாம்

## தேவாரம்

(41) மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே.

(42) உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வதும் காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே

(43) ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாமானாய் நின்றாய் நீயே
மலையான் மருகனாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென் மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதி

## திருவாசகம்

(44) பூசுவதும் வெண்ணீறு பூண்பதும் பொங்கரவும்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழேலோ

## திருவிசைப்பா

(45) ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

(46) பாலுக்குப் பாலன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள் ஆலிக்கும் அந்தணர்
வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப் பாலித்து நட்டம் பயில
வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

47) உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்

## திருப்புகழ்

(48) ஏறுமயில் ஏறிவிளையாடும் முகம் ஒன்றே
ஈசனுடைய ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினைதீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே.

(49) ஹரி நாராயண கோவிந்தா ஜெயநாராயண கோவிந்தா (2)
ஹரி நாராயண ஜெய நாராயண (2)
ஹரி கோவிந்தா கோவிந்தா (2)
*–ஹரி நாராயண கோவிந்தா*

தசரத நந்தன கோவிந்தா தசமுகமர்த்தன கோவிந்தா (2)
தசரத நந்தன தசமுகமர்த்தன (2)
ஹரி கோவிந்தா கோவிந்தா (2)
*–ஹரி நாராயண கோவிந்தா*

கோவிந்தா ஹரி கோவிந்தா (2)
கோவிந்தா ஹரி கோவிந்தா
*–ஹரி நாராயண கோவிந்தா*

(50) ஓம் ஜெய் கங்காதர– ஹர சிவ ஜெய் கீரிஜாதீசா
சிவ ஹர கௌரீ நாதா
த்வம் மாம் பாலய நித்யம் த்வம் மாம் ரக்ஷய நித்தியம்
சம்போ க்ருபயா ஜகதீச
ஓம் ஹர ஹர ஹர மஹாதேவ

(51) வான் முகில்வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

(52) நமோ பார்வதி பதயே
ஹர ஹர மஹாதேவ
கோவிந்த நாம சங்கீர்த்தனம்
கோவிந்தா கோவிந்தா
வள்ளி தேவசேனா கந்த ஸ்மரணம்
ஹர ஹர சுப்ரமணியோம்
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

(53) மஹா பிரசாதே கோவிந்தே
நாம பிரமன்ய வைஷ்ணவே
சுவல்ப புண்ணிய வத்தாம் ராஜன்
விசுவாசோநேவ ஜயதே

# திருக்கோணமலை அன்புவழிபுரம் தில்லையம்பலப் பிள்ளையார் திருவூஞ்சல்

இயற்றியவர்

"சிற்ப கலாபானு"

**அராலியூர் ஸ்தபதி கந்ததாஸ் இரவீந்திரராஜா**

**காப்பு**

இயற்கையொடு இறையருள் பொலிந்திலங்கும்
ஈசனருள் சைவநெறி புகழ்மிக் கோங்கும்
அலைகடல் சூழ் திருமலைப் பதியில் என்றும்
அருளோங்கும் அன்புவழிபுரம் தன்னில்
திகழோங்கும் தில்லை யம்பல பிள்ளையாரும்
திருவருள் சேர் தீந்தமிழில் ஊஞ்சல் பாட
கஜமுகனின் தாமரையி பாதமலர் பணிந்தேத்தி
கணபதி செஞ் சரணம் காப்பதாமே

(1) அறமோங்க வேதியர்நூல் கால்களாக
அருள்நிறை சிவாகமும் விட்டமாக
நாதந்த கலைஞானம் கயிறதாக
நவமான ஓங்காரம் பீடமாக
வேதநிறை தமிழுஞ்சல் மீதுவைகி
வெவ்வினை வேரறுக்கும் வித்தகாரம்
சீரோங்கும் அன்புவழிபுர பதிமேவும்
தில்லையம்பல பிள்ளையாரே ஆடீர்யூஞ்சல்

(2) புவிநிறை பக்தியெனும் கால்நிறுத்தி
புலனைந்தை சேர்த்தொன்றாய் விட்டமாக்கி
நன்னயமாய் நாற்கரண வடங்கள் மாட்டி
நடன எழில் ஜீவனவன் முக்தியூஞ்சல்
சித்தி புத்தியுடன் மகிழ்தே ஆட
சிற்பத்தின் ரத்தினமே தேவதேவே
திருவோங்கும் அன்புவழிபுர பதிமேவும்
தில்லையம்பல பிள்ளையாரே ஆடீர்யூஞ்சல்

(3) நவமணி சேர் சிரமுடியும் திகழ்ந்தே யாட
நல்நுதல் தணில்நீறும் திலகமாகப்
பூ முகத்தில் நயனவருள் பூத்து ஆடப்
புயம் நான்கும் இசைந்தாட பூவுமாட
கரகமதில் அங்குசபாச மாட
கரண்ட மணி ரத்தினபதக்க மாட
திருவளர் அன்புவழிபுர பதிமேவும்
தில்லையம்பலப் பிள்ளையாரே ஆடீர்யூஞ்சல்

(4) குண்டலங்கள் தானாட அசைந்து ஆடப்
குறுமுனிபோல் விழியாட மொழியும் ஆட
பேரருள்சேர் வயிறாட புன்முறுவலாட
பெருமைமிகு ரத்தினங்கள் தானுமாட
இறையாட அரியாட இகமுமாட
இந்திராதி தேவரொரு அயனுமாட
திகழு புகழ் அன்புவழிபுர பதிமேவும்
தில்லையம்பல பிள்ளையாரே ஆடீர்யூஞ்சல்

(5) ஞாயிறு வெண்குடையேந்த திகழ் திங்கள் பூக்கரிக்க
ஞானமதில் செவ்வாய் கவரி பற்ற
மலர்ந்தன்பால் புதனும் புளகம் எய்த
மதியுயர் ஞானச்செல் வியாழன் போடு
கலகல என வெள்ளிச்சி லம்பொலிக்க
கலைமிகு ஆசனத்தில் ஆசனித்தே
திருவடியார் நிறை அன்புவழிபுர பதிமேவும்
தில்லையம்பல பிள்ளையாரே ஆடீர்யூஞ்சல்

(6) கலை மகளாம் வாணியுமோர் வடம் தொட்டாட்ட
கருணைமிகு மலைமகளும் வடம் தொட்டாட்ட
பரதம் நிறை அரம்பையரோர் வடம் தொட்டாட்ட
பக்தியுயர் பக்தருமோர் வடம் தொட்டாட்ட
தஞ்சமென்றே அடியார்கள் தவமோங்க
தரணி புகழ் கலைக்கோயில் தானமர்ந்து
திருக்கோண நகர் அன்புவழிபுர பதிமேவும்
தில்லையம்பலப் பிள்ளையாரே ஆடீர்யூஞ்சல்

(7) பஞ்சபூதங்களும் தம்மை பலகையாக்கி
பஞ்சமுக கணபதியும் பீடம் மேவி
பாரிலுள்ளோர் வினைகளையும் வேரறுக்கும்
பஞ்ச ரத்தினமிகு பெரு வயிறோ
ஆகமங்கள் வழிசெய்த ஆலயத்தில்
அலங்கார திருக்கோலம் தானமர்ந்து
திருமஞ்சல் சூழ் அன்புவழிபுர பதிமேவும்
தில்லையம்பலப் பிள்ளையாரே ஆடீர்யூஞ்சல்

(8) அன்புடன் ஆலயம் அமைத்த அன்பருக்கு
அருளுடன் நல்வாக்கு தான் கொடுத்து
கல்லன்பத்தை விட்டு வந்ததுவும் உன் திருவருளே
காண உருத்தாங்கி கருணை மழை பொலிந்திடவே
கோணநாதர் மனமகிழ் குஞ்சரனாய்
கோயிலமர்ந்த சுப்பிர மணிய சோதரரே
திறணோங்கும் அன்புவழிபுர பதிமேவும்
தில்லையம்பலப் பிள்ளையாரே ஆடீர்யூஞ்சல்

(9) கோண நகர் அம்மை அப்பனாட
கோகுலத்தின் கண்ணபிரானு மாட
குறவள்ளி குமரனும் ஆட ஆட
குடையரவின் நாக தம்பிரானுமாட
பார் புகழ் பத்திரகாளியும் ஆட ஆட
பலத்தினறைவன் பைரபரும் சூல மாடப்
திருமகள் மகிழ் அன்புவழிபுர பதிமேவும்
தில்லையம்பலப் பிள்ளையாரே ஆடீர்யூஞ்சல்

(10) கஜமுக கணபதியே ஆடீர்யூஞ்சல்
கார்த்திகேயன் சோதரரே ஆடீர்யூஞ்சல்
மோசிக வாகனரே ஆடீர்யூஞ்சல்
மோதக ஹய்தமொடு ஆடீர்யூஞ்சல்
வேழமுகம் தானாட ஆடீர்யூஞ்சல்
வேண்டும் வரம் தருபவனே ஆடீர்யூஞ்சல்
தீந்தமிழ் அன்புவழிபுர பதிமேவும்
தில்லையம்பலப் பிள்ளையாரே ஆடீர்யூஞ்சல்

(11) பஞ்சமுக கணபதியே ஆடீர்யூஞ்சல்
பார்வதியின் புத்திரரே ஆடீர்யூஞ்சல்
ஏகதந்த நாயகரே ஆடீர்யூஞ்சல்
ஏறுமயில் சோதரரே ஆடீர்யூஞ்சல்
நற்தமிழ் ஊஞ்சலிலே ஆடீர்யூஞ்சல்
நல்லடியார் துயர் தீர்க ஆடீர்யூஞ்சல்
தீஞ்சுவை அன்புவழிபுர பதிமேவும்
தில்லையம்பலப் பிள்ளையாரே ஆடீர்யூஞ்சல்

## வாழி

செந்தண்மை அந்தணரும் ஆவும் வாழி
செம்மை மிகு சைவநெறி தழைத்தே வாழி
மண்ணுலகில் மும்மாரி மலிந்தே வாழி
மாந்தர் மகிழ் செங்கோலும் சிறந்தே வாழி

பாரினிலே கனல கல்வி, ஞானம் வாழி
பாவையரின் கற்புநெறி பொரிந்தே வாழி
சிவனுறையும் கோணநகர் தொண்டரும் வாழி
சிந்தூர வர்ண தில்லையம்பல பிள்ளையாரும் வாழி வாழி

## எச்சரீக்கை

கணங்கள் தொழுதேத்தும் தேவ எச்சரீக்கை
கருணைபொழி கருணாகர பரனே எச்சரீக்கை
உமையாள் திருமகனே கஜனே எச்சரீக்கை
உரகபட மணியணியும் முதலே எச்சரீக்கை

அசுரர் மதம் எரித்த அரசே எச்சரீக்கை
அற்புதமாம் பாரதத்தை யாத்தவரே எச்சரீக்கை
சித்தியொடு முக்தி தரு திருவே எச்சரீக்கை
திகழு புயமைந்தும் கொண்டோய் எச்சரீக்கை

கஜமாமுக சூரவதம் செய்தோய் எச்சரீக்கை
கலைகள்பல மொழியும் கரனே எச்சரீக்கை
பக்திமிகு அன்புவழிபுர தேவே எச்சரீக்கை
பார் போற்றும் தில்லையம்பல பிள்ளையாரே எச்சரீக்கை

## பராக்கு

பால கணபதியே ஐயா பராக்கு
பந்த வினை தீர்த்தருளும் பரமே பராக்கு
ஓங்கார தெய்வமானாய் முதலே பராக்கு
ஓடிவந் தருள்புரி வாய்ஒளியே பராக்கு

துதிப்போர்க்கு துணையருள் செய்வோனே பராக்கு
தும்பிக்கை நம்பிக்கை யானாய் பராக்கு
புன்னகையின் பூமுகத்தோய் பொருளே பராக்கு
பூலோக நாயகரே புனிதா பராக்கு

வெவ்வினை வேரறுக்கும் வேழா பராக்கு
வேண்டும் வரம் ஈந்தருளும் ஈசா பராக்கு
கலைக்கோயில் தானமர்ந்த கருணா பராக்கு
கருணைமேவும் அன்புவழிபுர அரனே பராக்கு

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
அகிலாண்ட ஈஸ்வரரே லாலி லாலி
அற்புதங்கள் கடந்தவரே லாலி லாலி
மாங்கனியை பெற்றவரே லாலி லாலி
மங்கள நாயகரே லாலி லாலி

சிவசக்தி பாலருக்கு லாலி லாலி
சிவகுமார சோதருக்கு லாலி லாலி
சர்வலோக நாதருக்கு லாலி லாலி
சஞ்சலங்கள் தீர்த்திடவே லாலி லாலி

முத்துமணி முதல்வருக்கு லாலி லாலி
முன்வினை யகன்றிடவே லாலி லாலி
அன்புவழி அப்பனுக்கு லாலி லாலி
அடியார்க் அருள் செய்ய லாலி லாலி

## மங்களம்

மாமலையின் மாதுமை ஈசருக்கும் மங்களம்
மஹாவல்லி கெஜாவல்லி நாதருக்கும் மங்களம்
கலியுகத்தில் கண்கண்ட காளிக்கும் மங்களம்
கருணையுடன் காத்தருளும் லக்ஷ்மிபாகருக்கும் மங்களம்

வேதங்கள் ஓதகின்ற வேதியர்க்கும் மங்களம்
வேழமுகன் புகழ்பாடும் பாவலர்க்கும் மங்களம்
கலைமேவு பணிபுரி கலைநகருக்கும் மங்களம்
கஜமுகனின் தாள்பணியும் அடியவர்க்கும் மங்களம்

சைவ நெறி தழைத்தோங்க மங்களம்
தமிழுஞ்சல் பூப்பரிக்க மங்களம்
தவமோங்கும் அன்புவழிபுர பதிக்கு மங்களம்
தந்திமுகப் பிள்ளையார்க்கு ஜெய மங்களம்

*மங்களம் மங்களம் மங்களம்*
*ஜெய மங்களம்*
*நித்திய சுப மங்களம்*

**சுபம்**

Graphics Designed and Printed by Unie Arts (Pvt) Ltd. Colombo-13. Tel:330195